Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, JULY 9, 2022

சனிக்கிழமை ஜூலை 09, 2022 | ஒளி: 08 கதிர்: 044 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free

# கொத்து கொத்தாக கொழும்பில் குவிப்பு



**சாரைசாரையாக மக்களும் அணிதிரட்டு வருகின்றனர்**

**எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் மௌனித்தன**

**நாடளாவிய ரீதியில் ஆங்காங்கே ஆர்ப்பாட்டத்துக்கு முஸ்தீபு**

இன்று ஜூலை ஒன்பதாம் திகதி சனிக்கிழமையன்று அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளுக்கு பெரும் ஆதரவு வழங்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. 'கொழும்புக்கு வரும் நாடு' என்னும் பொதுவான தொனிப்பொருளிலும், 'கோட்டா வீட்டுக்குப் போ', 'பிரதமர் வீட்டுக்குப் போ', 'அரசாங்கமே வீட்டுக்குப் போ' என்று நீண்ட நாள்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்களுக்கு வலுசேர்த்து

தொடர்ச்சி P2



## ஷின்சோ அபே சுட்டுக்கொலை



ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே மீது நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் கடும் காயத்திற்கு உள்ளாகி சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2



## தடைசெய்யப்பட்ட நிறுவனங்கள், தனிநபர்களின் பட்டியல் மீளாய்வு

**அரசியல் கைதிகளின் விடுதலை குறித்தும் அரசாங்கம் கவனம்**

ஐக்கிய நாடுகளின் ஒழுங்குமுறைகளின் கீழ் தடைசெய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் பட்டியலை மீளாய்வு செய்வது குறித்தும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் விடுதலை குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்துவதாகவும்,

தொடர்ச்சி P2

## த.மு.கூவையும் இ.தொ.காவையும் இணைக்கும் முயற்சியில் இந்தியா

பா.நிரோஸ்

தமிழ் முற்போக்கு கூட்டணியையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸையும் ஒன்றிணைக்கும் முயற்சிகளில் இந்திய இறங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கை முகம் கொடுத்து வரும் நெருக்கடி நிலைமைகளை எடுத்துரைத்து, இவ்வாறான நிலையில் தனித்தனியாக பிரிந்து செயல்படுவதை விட இரு கட்சிகளும் ஒன்றிணைந்து பொதுத்தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டும் எனவும் இந்தியா வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

தொடர்ச்சி P2

## 9 க்கு ஐ.தே.க ஆதரவு

பொதுமக்களால் இன்று (09) நடத்தப்படவுள்ள அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு ஐக்கிய தேசிய கட்சி தனது ஆதரவை வழங்கியுள்ளது.

ஜனாதிபதியின் பதவி விலகல் உள்ளிட்ட முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள அமைதிப் போராட்டத்திற்கு ஆதரவு அளிப்பதாக அறிக்கையொன்றை வெளியிட்டு ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



அமைதியான போராட்டத்தை வன்முறையாக மாற்ற

## ஒற்றர்களால் பெரும் சதி

காலிமுகத்திடலில் முன்னெடுக்கும் போராட்டத்திற்கு முழுமையான ஆதரவை வழங்குவோம். தொடர்ச்சியாக இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து அரசாங்கத்தை விரட்டியடிப்போம். அமைதியான போராட்டத்தை வன்முறையாக மாற்றி, அடக்குமுறையை கையாள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.


தொடர்ச்சி P2

## போராட்டங்களை நிதானமாக கையாள வேண்டும்

**பாதுகாப்பு படைகளை கட்டுப்படுத்தக்கோரி ஐ. நா மனித உரிமைகள் ஆணைக்குழு அரசங்கத்துக்கு வலியுறுத்து**

இன்று கொழும்பில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டத்தை ஜனநாயக ரீதியில் முன்னெடுக்க இடமளிக்க வேண்டும் எனவும், போராட்டங்களை நிதானமாக பொலிஸார் கையாள வேண்டும் எனவும், வன்முறையைத் தடுக்க தேவையான அனைத்து முயற்சிகளையும் உறுதிப்படுத்துமாறும் இலங்கை அதிகாரிகளை கேட்டுக்கொள்வதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2




## இலங்கை விமானங்களுக்கு இந்திய எரிபொருள்

இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறையை அடுத்து ஸ்ரீ லங்கன் விமான சேவைகளுக்கு இந்திய அரசுக்கு சொந்தமான, பாரத் பெற்றோலியம் நிறுவனம் எரிபொருள் நிரப்புவதாக தெரிவித்துள்ளது. பாரத் பெற்றோலியமும் தமது டுவிட்டர் பக்கத்தில் இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

## தனியார் மருத்துவ சேவைகள் முடங்கும்

அரசாங்கத்திற்கு எதிராக நாடளாவிய ரீதியில் இன்றைய தினம் முன்னெடுக்கப்படும் அமைதிப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இன்று (9) தனியார் மருத்துவ சிகிச்சையில் ஈடுபடுவதை தவிர்க்க மருத்துவ நிபுணர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. எவ்வாறாயினும், விபத்துகள்,பிற அறுவை சிகிச்சை,

தொடர்ச்சி P2

போராட்டத்துக்கு ஆதரவு வழங்க தீர்மானம் இல்லை

## எமது அமைப்புகளின் பெயர்கள் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளன

**யாழ்ப்பாணத்திலுள்ள அமைப்புகள் சில கண்டனம்**

இன்று (ஜூலை 9) இலங்கை முழுவதும் தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகள், சிவில் அமைப்புகள் பெயரில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போராட்டத்தில் தமது அமைப்புகளின் பெயர்கள் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணத்திலுள்ள அமைப்புக்கள் சில கண்டனம் தெரிவித்துள்ளன.

தொடர்ச்சி P2



ஜனாதிபதி இராஜினாமா செய்ய வேண்டுமென

## 'செங்கடகல பிரகடனம்' நிறைவேற்றம்

**மகாநாயக்க தேரர்கள், சர்வமத தலைவர்கள், சிவில் அமைப்பினர் கையொப்பமிட்டனர்**

நாட்டில் சிறந்த ஆட்சியை உருவாக்குவதற்கான செங்கடகல பிரகடனத்தில் மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட சர்வமதத் தலைவர்கள் மற்றும் சிவில் பிரதிநிதிகள் நேற்று (08) கண்டியில் வைத்து கையொப்பமிட்டுள்ளனர். 2022 ஆம் ஆண்டு மே 11 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு உரையாற்றியதைப் போன்று, நிபந்தனையின்றி அவர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியில் இருந்து இராஜினாமா செய்ய வேண்டும் என அதில் பிரதானமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## வன்முறை தீர்வல்ல

**அமைதியான முறையில் போராடுங்கள்**



ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள், எதிர்க்கட்சி அரசியல் தரப்பினர் கொழும்பை இன்று முற்றுகையிடவுள்ள நிலையில் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் அது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

போராட்டத்தில் ஈடுபடப்போகின்றீர்கள் என்றால் அதனை அமைதியான முறையில் முன்னெடுங்கள். அதேபோல் அமைதியான எதிர்ப்பாளர்களுக்கு பாதுகாப்பை வழங்க இராணுவம், பொலிஸார் நினைவில் கொள்ளவேண்டும்.

தொடர்ச்சி P2



## வாரியப்பொல வரிசை

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை அடுத்து நாட்டின் சகல பகுதிகளிலும் மக்கள் வரிசை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் வாரியப்பொல பகுதியில் மக்கள் எரிபொருளுக்காக நிரப்பு நிலையம் முன்னால் நிற்கின்ற புகைப்படம்.....

## ஐ.ஓ.சி உரிமையாளர் மீது தாக்குதல்

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு, முள்ளியவளை லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் மீது தாக்குதல் நடத்திய இருவரை முள்ளியவளை பொலிஸார் நேற்று முன்தினம் (07) கைதுசெய்தனர்.

அவ்விருவரும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நேற்று (08) முன்னிலைப்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 21.07.2022 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார் .

தொடர்ச்சி P2



## 22இல் மாற்றங்கள் அவசியம்

**இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து**



அரசாங்கம் முன்வைத்துள்ள 22 ஆம் திருத்தச் சட்டத்தின் யோசனைகளில் ஒரு சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறான திருத்தங்களை முன்னெடுத்தால் மட்டுமே நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை உருவாக்கிக்கொள்ள முடியும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

இன்றைய போராட்டத்துக்கு

## எமது ஆதரவு 110 % உண்டு

எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறை மற்றும் ஆக்கிரமிப்புகள் இன்று பெரும்பான்மை சமூகத்திற்கு எதிராக திரும்பியுள்ளது. ஆனால் இன்றைய போராட்டங்களில் நாம் உங்களுடன் நிற்கின்றோம். 110 சதவீதம் எமது ஆதரவு உங்களுக்கு உண்டு என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஷின்சோ அபே சுட்டுக்கொலை

ஜப்பானின் மேற்கு நகரான நாராவில் நேற்று (8) வெள்ளிக்கிழமை தேர்தல் பிரச்சார உரை நிகழ்த்திக்கொண்டிருந்த போது அபே துப்பாக்கி சூட்டுக்கு இலக்கானார்.

இவ்வாறு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அவர் நெஞ்சில் படுகாயமுற்ற நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக ஜப்பானிய ஊடகங்கள் மற்றும் அவர்களது நாட்டின் உத்தியோகபூர்வ செய்திச் சேவை என்பன தெரிவித்துள்ளன.

ஜப்பானில் கடந்த 2006 , 2007 மற்றும் 2012, 2020 வரை பிரதமராக பதவி வகித்தவர் ஷின்சோ அபே. ஜப்பானில் நீண்ட காலம் பிரதமராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாது இலங்கையுடன் நெருக்கமான நட்புறவை பேணுவதிலும், இலங்கைக்கான அபிவிருத்தி கடன் உதவிகளை செய்வதிலும் கூட அவரது தலைமைத்துவம் கூடிய பங்களிப்பை செலுத்தியதாக இலங்கையின் பல்வேறு அரசியல் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## தடைசெய்யப்பட்ட...

அரசியலமைப்பின் உத்தேச 21வது திருத்தத்தினை நிறைவேற்றுவதில் அரசாங்கம் கவனம் செலுத்துவதாகவும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சாய்பியை அண்மையில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இக்கலந்துரையாடலின் போது, தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பான அபிவிருத்திகள், 2012ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் ஒழுங்குமுறை இல. 1 இன் கீழ் தடைசெய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் பட்டியலை மீளாய்வு செய்தல், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் விடுதலை, சுயாதீன நிறுவனங்களால் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் அரசியலமைப்பின் உத்தேச 21வது திருத்தத்தின் முக்கிய அம்சங்கள் குறித்து அமைச்சர் பீரிஸ் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவருக்கு விளக்கமளித்தார்.

நிறுவப்பட்ட உள்நாட்டுப் பொறிமுறைகளின் மூலம் அரசாங்கம் சரிபார்க்கக்கூடிய மற்றும் அளவிடக்கூடிய பெரும் முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்றும், தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் தேவையான அரசியல் சீர்திருத்தங்களை வழங்குவதில் கவனம் செலுத்துவதாகவும் அமைச்சர் வலியுறுத்தினார். சமூகத்தின் நலிவடைந்த பிரிவினரை இலக்காகக் கொண்ட பல்வேறு நலன்புரி நடவடிக்கைகளை உள்ளடக்கிய புதிய வரவு செலவுத் திட்டத்தை விரைவில் சமர்ப்பிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

2024 - 2033 ஆம் ஆண்டிற்கான அடுத்த ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி. ஒழுங்குமுறை தற்போது ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழுவிலும் ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்திலும் கலந்துரையாடப்பட்டு வருவதாக தூதுவர் தெரிவித்தார். அண்மையில் முடிவடைந்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது கூட்டத் தொடர் உட்பட மனித உரிமைகள் பேரவை உறுப்பினர்களுடன் இலங்கை தனது ஆக்கபூர்வமான ஈடுபாட்டைத் தொடர்வதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## விநியோகம் இடைநிறுத்தம்

லங்கா ஐ.ஓ.சி மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கைகளை அதிரடியாக நிறுத்தியுள்ளன.

நேற்று (08) நிறுத்தப்பட்ட எரிபொருள் விநியோகம், இன்றும் (09) முன்னெடுக்கப்படுமென ஐ.ஓ.சி அறிவித்துள்ளது. இதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுதாபனம், இன்றும் (09) நாளையும் (10) எரிபொருள் விநியோகத்தை நிறுத்தியுள்ளது. 11ஆம் திகதி திங்கட்கிழமை முதல் எரிபொருள் விநியோகம் வழமைக்குத் திரும்புமென கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது,

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் வழங்குவதை லங்கா ஐ.ஓ.சி இடைநிறுத்தியிருந்தாலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும் தொழிற்சாலைகளுக்கு எரிபொருள் தொடர்ந்தும் விநியோகிக்கப்படும் என ஐ.ஓ.சி தெரிவித்துள்ளது.

## கொத்து கொத்தாக...

அரசாங்கத்துக்கு கடுமையான அழுத்தங்களைக் கொடுக்கும் வகையிலேயே இந்த ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அவற்றுக்கு அணிசேர்க்கும் வகையில், நாடளாவிய ரீதியில் கடந்த இரண்டு தினங்களாக ஆதரவு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. நேற்றையதினமும் (08) கொழும்புக்கு பேரணிகள் படையெடுத்தன.

அவ்வாறு வந்தவர்கள், "கோட்டா கோ கம"வுடன் சங்கமித்தனர். சாரை,சாரையாக கொழும்புக்கு இன்னும் பலர் ஆங்காங்கே காத்திருக்கின்றனர். அவர்கள் அனைவரும் இன்றைய (09) பேரணிகளுடன் கைக்கோர்த்துக்கொள்ளவுள்ளனர்.

போக்குவரத்து நெருக்கடி காரணமாக, இரண்டு தினங்களுக்கு முன்னரே, கொழும்புக்கு வருகைதந்த பலரும், கொழும்பில் முகாமிட்டுள்ளனர்.

சமூக வலைத்தளங்களின் ஊடாக விடுக்கப்பட்ட " ஜூலை 9" போராட்டத்துக்கு அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், மதத் தலைவர்கள் உட்பட பலரும் முழுமையான ஆதரவை நல்கிவருகின்றனர்.

பிரதான கட்சிகளில் அங்கம் வகிக்கும் உள்ளூர் தலைவர்களும் அமைப்பாளர்களும் நாடளாவிய ரீதியில் ஆங்காங்கே போராட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர். ஒவ்வொரு நகரங்களிலும் இன்றையதினம் போராட்டங்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடைகளை மூடி, போராட்டத்துக்கு ஆதரவு நல்குமாறு, வர்த்தக சங்கங்களின் தலைவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். ஆகையால், முழுமையாக நாடு ஸ்தம்பிக்கும் நிலைமையொன்றே அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களில், எரிபொருள் விநியோகிக்கும் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. அத்துடன் வெளிமாட்டங்களில் இருந்து கொழும்புக்கு வரவேண்டிய பஸ்களின் எண்ணிக்கையும் குறைந்துவிட்டன. இதனால், "ஜூலை 9 போராட்டத்துக்கு" வருகைதர திட்டமிட்டிருந்த பலரும், வீடுகளுக்கே திரும்பிவிட்டனர்.

நிலைமை இவ்வாறு இருக்க, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டிருக்கும் படையினர், பஸ்களின் மூலமாக ஏற்றிவரப்பட்டு கொழும்பிலும், அண்மித்த நகரங்களிலும் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளுக்காக மக்களும், பாதுகாப்பு கடமைகளுக்காக படையினரும் கொழும்பில் கொத்து கொத்தாக குவிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் இன்றைய நாளை (ஜூலை 9) உலக நாடுகளும் அமைப்புகளும் கழுகுக் கண்கொண்டு பார்த்துக்கொண்டிருக்கும் அதேவேளை, அமைதியான முறையில் போராட்டங்களை முன்னெடுக்குமாறும், போராட்டங்களை நிதானமாக கையாளுமாறும் தூதுவராலயங்களில் சிலவும், சர்வதேச அமைப்புகள் சிலவும் அறிக்கைகளை விடுத்து கேட்டுக்கொண்டுள்ளன.

## இலங்கை விமானங்களுக்கு...

அதற்கமைய இலங்கையின் சுமார் 100 விமானங்களுக்கு இதுவரை, திருவனந்தபுரம், சென்னை மற்றும் கொச்சி விமான நிலையங்களில் எரிபொருள் நிரப்பப்பட்டுள்ளது. கடந்த பதினைந்து நாட்களுக்கும் மேலாக, மிகக் குறுகிய அறிவிப்பில், இந்த எரிபொருள் நிரப்புதல் செய்யப்பட்டுள்ளது என்று பாரத் பெற்றோலியம் குறிப்பிட்டுள்ளது. இந்தியாவின் இந்த சேவைக்கு ஸ்ரீலங்கன் விமான சேவையும் தனது நன்றிகளை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தனியார் மருத்துவ...

மருத்துவ அவசரநிலைகள் மற்றும் தனியார் துறையில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு பராமரிப்பு வழங்கள் போன்ற சேவைகளில் மாத்திரம் ஈடுபடவுள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது..

அரசாங்கத்தை பதவி விலகுமாறு அழுத்தம் கொடுப்பதற்காக நாடளாவிய அமைதியான எதிர்ப்பு பிரச்சாரங்களுக்கு ஆதரவளிக்க மருத்துவ நிபுணர்கள் சங்கம் ஏற்கனவே எடுத்திருந்த தீர்மானத்திற்கு அமைவாக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக மருத்துவ நிபுணர் சங்கம் தெரிவித்துள்ளது. அத்துடன் தனியார் மருத்துவ சேவையை நாடும் பொதுமக்களுக்கு தமது நடவடிக்கைகளால் ஏற்படும் சிரமத்திற்கு வருந்துவதாகவும் என்றும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

## எமது அமைப்புகளின்...

யாழ்ப்பாணத்தில் போராட்டத்திற்கு அழைப்பு விடுப்பது தொடர்பில் கூட்டப்பட்ட கூட்டத்தில் பங்கெடுத்திருந்த போதும் தமது அமைப்பு ஆதரவு வழங்குவது தொடர்பிலான நிலைப்பாடு எதனையும் எடுத்திருக்கவில்லையென குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் கோமகன் தெரிவித்துள்ளார். ஏற்பாட்டு கூட்டத்தில் தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகளான காணிகள் விடுவிப்பு,அரசியல் கைதிகள் விடுதலை,காணாமல் ஆக்கப்பட்டோரினை கண்டறிதல்,பௌத்த மயமாக்கல் உள்ளிட்ட ஐந்து முக்கிய அம்சங்கள் தொடர்பிலான நிலைப்பாட்டையும் தமிழர் தேசமாக தமிழ்த்தேசியம் சார்ந்ததே என ஏற்பாட்டாளர்களிடம் கோரியிருந்தோம்.ஆயினும் அவர்களிடமிருந்து திருப்திகரமான பதில்கள் கிடைக்கவில்லை.

இத்தகைய சூழலில் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவது தொடர்பிலான நிலைப்பாடு எதனையும் எடுத்திருக்காத நிலையில் யாழ்ப்பாணத்திலும் போராட்டத்தை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டு எமது ஆதரவு பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக கோமகன் தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்தை பதவிவிலகக் கோரி யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து யாழ். நகர் நோக்கி நாளை (இன்று) காலை 9 மணிக்கு துவிச்சக்கர வண்டிப் பேரணியொன்றை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டத்திற்கு, யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், செம்முகம் ஆற்றுகைக் குழு, தேசிய கலை இலக்கிய பேரவை, தமிழ்த் தேசிய பண்பாட்டு பேரவை, யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம், குரலற்றவர்களின் குரல், பன்மைத்துவ மக்களாட்சி மன்றம், புதிய ஜனநாயக மாக்ஸிஸ லெனிஸ கட்சி,சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஆகிய பொது அமைப்புகள் ஆதரவளிப்பதாக ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## வன்முறை தீர்வல்ல

குழப்பமும் அழுத்தமும் பொருளாதாரத்தை சரி செய்யவோ அல்லது இலங்கையர்களுக்கு தற்போது தேவையான அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தாது. வன்முறை தீர்வல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பாரிய பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதற்குமான மக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும் என நோர்வே தூதுவர் ட்ரைன் எஸ்கடெல் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## த.மு.கூவையும்...

குறிப்பாக அடுத்த பொதுத் தேர்தலில் இரு கட்சிகளும் ஒன்றிணைந்து களம் இறங்கினால் வடக்கு கிழக்குக்கு வெளியில் இந்திய வம்சாளி மக்கள் வாழும் மாவட்டங்களில் இருந்து அதிகளவான பிரநிதிகளை பாராளுமன்றத்துக்கு அனுப்ப முடியும் என இந்தியா திட்டம் வகுத்துள்ளதாம். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸையும் தமிழ் முற்போக்கு கூட்டணியையும் ஒன்றிணைக்கும் முயற்சிகளில் இந்திய அரசாங்கம் இறங்கியுள்ளதோடு இந்த முயற்சிகளுக்குப் பின்னால் வெவ்வேறு தரப்பிரின் இணக்கங்களும் ஒத்துழைப்புகளும் இருப்பதாக தெரிய வருகின்றது.

## செங்கடகல...

அதேபோல் இலங்கை மக்களாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட தலைவர் ஒருவரே ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும் எனவும் அப்பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சர்வகட்சி அரசாங்கமொன்று குறிப்பிட்ட காலத்திற்கு நியமிக்கப்பட வேண்டும் எனவும், 19 ஆம் திருத்தத்திற்கு அப்பாற்சென்று 22 ஆம் திருத்தத்தை மிக விரைவில் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும் எனவும் செங்கடகல பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வகட்சி அரசாங்கத்தின் ஜனாதிபதி, பொதுத்தேர்தல் அல்லது ஜனாதிபதி தேர்தல் ஒன்று நடைபெறும் வரை பதவியில் இருப்பார் எனவும் அதற்கான காலவரையறை குறிப்பிடப்பட வேண்டும் எனவும் அதில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ஐ.ஓ.சி உரிமையாளர் மீது தாக்குதல்

சம்பவ தினமான நேற்று முந்தினம் (07) மாலை, டோக்கன் அடிப்படையில் பெற்றோல் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தது. விமானப் படையினர் பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்தனர்.

பாதுகாப்பை மீறி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வெளியில் இருந்து முச்சக்கரவண்டியில் திடீரென நுழைந்த மூவர் தமது முச்சக்கர வண்டிக்கு எரிபொருள் வழங்குமாறு வற்புறுத்தியுள்ளனர். இதனால், அங்கு வாக்குவாதம் இடம்பெற்று கைகலப்பாக மாறியுள்ளது. அதற்குப் பின்னரே மூவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## 22இல் மாற்றங்கள்...

கொழும்பில் நேற்று(8) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்,

அரசாங்கம் இப்போது முன்வைத்துள்ள 22 ஆம் திருத்தச் சட்டத்தின் யோசனைகளில் ஒரு சில மாற்றங்களை ஏற்படுத்தியதாக வேண்டும். அவ்வாறான திருத்தங்களை முன்னெடுத்தால் மட்டுமே நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை உருவாக்கிக்கொள்ள முடியும். அரச நிறுவனங்களின் சுயாதீனமற்ற தன்மையே நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது. அரசியல் அமைப்பு சபை சுயாதீனமாக இல்லையென்றால், அரசியல் அமைப்பு சபையினால் பறித்துரைக்கப்படுகின்ற, ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நியமனங்களில் சுயாதீனம் குறித்து கேள்வி எழும். ஆகவே அரசியல் அமைப்பு சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களை 22 ஆம் திருத்தத்தில் உள்ளடக்கினாலும் அவை அர்த்தபூர்வமாக சுயாதீன நிறுவனங்களாக மாறாது என்றார்.

## 9 க்கு ஐ.தே.க ஆதரவு

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதையும் வன்முறைச் சம்பவங்களைத் தவிர்ப்பதையும் உறுதிசெய்யுமாறு ஐக்கிய தேசியக் கட்சி பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை, போராட்டங்களின் போது மிகுந்த நிதானத்தைக் கடைப்பிடிக்குமாறு பொலிஸார் மற்றும் பிற பாதுகாப்புப் படையினரிடம் அக்கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

## ஒற்றர்களால் பெரும் சதி

போராட்டத்திற்கு நடுவில் அரச ஒற்றர்களை களமிறக்கி வன்முறைகளை தூண்ட சதிகள் முன்னெடுக்கப்படலாம் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியினால் கொழும்பில் நேற்று (8) ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்திருந்தார்,

நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க அரசாங்கத்தினால் முடியாமல் போயுள்ளது, அரச சேவைகள் வீழ்ச்சி கண்டுள்ளன, வைத்திய கட்டமைப்பு வீழ்ச்சி கண்டுள்ளது, கல்வி முடங்கியுள்ளது, மக்கள் வீதிக்கு வந்துள்ளனர், நாளாந்தம் வரிசைகள் அதிகரிக்கின்றன. இதனால் மரணங்கள் அதிகரிக்கின்றன. ஆகவே நாட்டு மக்கள் வாழவே முடியாத நிலைமை உருவாகியுள்ளது. உணர்வில்லாதாக ஆட்சியாளர்கள் நாட்டை நாசமாக்கியுள்ளனர்.

ஒட்டுமொத்த நாடும் ஒன்றிணைந்து இந்த அரசாங்கத்தை விரட்டியடிக்கும் வரையில் தொடர்ச்சியாக போராட வேண்டும். இவர்களை விரட்டியடித்தால் மட்டுமே தீர்வு கிடைக்கும். நாளை (இன்று) காலிமுகத்திடலில் முன்னெடுக்கும் போராட்டத்திற்கு முழுமையான ஆதரவை வழங்குவோம். தொடர்ச்சியாக இந்த போராட்டத்தை முன்னெடுத்து அரசாங்கத்தை விரட்டியடிப்போம் என்றும் அவர் இந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

## போராட்டங்களை...

அதேநேரம், போராட்டங்களை ஏற்பாடு செய்தவர்களிடமும், ஆதரவாளர்களிடமும் அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுமாறும், அத்தியாவசிய மருத்துவ அல்லது மனிதாபிமான சேவைகளுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் போராட்டங்களை முன்னெடுக்குமாறும் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோர் ஆர்ப்பாட்டங்களை கண்காணிக்கவும் அறிக்கையிடவும் உரிமை உண்டு. எனவே இவற்றை செயல்படுத்துவதில் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுடன், எந்த வகையிலும் தடை செய்யக்கூடாது என்று பாதுகாப்புப் படையினருக்கு தெளிவான அறிவுறுத்தல்களை வழங்குமாறு அதிகாரிகளை கேட்டுக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் மற்றும் இராணுவப்படைகள் எதிர்கொள்ளும் சவால்களை நாங்கள் அங்கீகரிக்கும் அதே வேளையில், தங்களைத் தாங்களே தாக்கிக் கொள்ளும் நிகழ்வுகள் உள்ளிட்ட பொதுமக்களைக் கையாள்வதில் வன்முறையைத் தவிர்க்கவும், மிகுந்த கட்டுப்பாட்டுடன் செயல்படவும் அரசாங்கம் காவல்துறை மற்றும் ஆயுதப்படைகளுக்கு கடுமையான அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

விதிவிலக்கான சூழ்நிலைகளில், இராணுவம் சட்ட அமலாக்க செயல்பாடுகளை மேற்கொள்ளும் போது, அவர்கள் சர்வதேச விதிமுறைகள் மற்றும் தரங்களுக்கு கட்டுப்பட்டு, சிவில் அதிகாரிகளுக்கு முழுமையாக கீழ்ப்படிந்து சிவில் சட்டத்தின் கீழ் பொறுப்புக்கூற வேண்டுமென ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## எமது ஆதரவு 110%...

இன்றைய இளம் சமூகம் முன்னோக்கி செல்கின்றது, சகலரும் சமமானவர்கள் என்ற சிந்தனையை கொண்டுள்ளனர். நாமும் நேர்மையானவர்கள் என்பதை வெளிப்படுத்த வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர். நாட்டு மக்களின் அதிகூடிய பெரும்பான்மை வாக்குகளினால் ஜனாதிபதி தெரிவாகினார். அதேபோல் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு அண்மித்த பலம் கொண்ட அரசாங்கத்தையும் மக்கள் தெரிவு செய்தனர். இரண்டு ஆண்டுகளில் ஒட்டுமொத்த நாடுமே இவர்களை பதவி விலகுமாறு வலியுறுத்தும் நிலைமை உருவாகியுள்ளது. அத்துடன் பொறிமுறை மாற்றம் ஒன்றும் வேண்டும் என மக்கள் வலியுறுத்துகின்றனர். இவர்களை ஊழல் வாதிகள், நிருவாக திறன் அற்றவர்கள் என்பதை இவர்கள் அப்போது தெரிந்துகொள்ளவில்லையா? தெரிந்தும் ஏன் தெரிவு செய்தார்கள்?

66 ஆண்டுகளுக்கு முன்னர் தனி சிங்கள சட்டம் நிறைவேற்றப்பட்ட நேரத்தில் முதலில் எமது தலைவர்களே காலிமுகத்திடல் போராட்டத்தை நடத்தினர்,அப்போது எவருமே எம்முடன் கைகோர்க்கவில்லை. இன்று குரல் எழுப்பும் எவரும் அன்று எங்கு போயிருந்தீர்கள் என்ற கேள்வியை நான் கேட்கின்றேன். அன்று அடக்குமுறை, இனவாதம், இராணுவ ஆக்கிரமிப்பு ஆகியன எமது பக்கம் திரும்பிய வேளையிலும் இவர்களை நாம் எதிர்த்தோம். இன்று அது உங்கள் பக்கம் திரும்பியுள்ளது. இப்போதும் நாம் உங்களுடன் இருக்கின்றோம். முழுமையாக உங்களுடன் நிற்கின்றோம். 110 சதவீதம் எமது ஆதரவு உங்களுக்கு உண்டு. ஆனால் இந்த புரட்சியின் பின்னர் என்ன செய்யப்போகின்றோம். இதுவே எமது கேள்வியாகும். முதலில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு வேண்டும்,

இப்போதும் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது என்றார்.



கப்பல் துறை கிராம மக்களின் காணிகளை

# அபகரிக்க முயலும்

## துறைமுக அதிகார சபை

ஹஸ்பர் ஏ ஹலீம்
ahhasfar@gmail.com

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமமே கப்பல் துறை கிராமம். கண்டி - திருகோணமலை பிரதான வீதியில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் இக் கிராமம் அமைந்துள்ளது.

மக்களின் அன்றாட ஜீவனோபாய தொழிலாக கூலித் தொழில், மழையை நம்பிய விவசாயம், வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை சிறந்து விளங்குகின்றது. ஆனாலும் ஆரம்ப காலம் தொட்டு வாழ்ந்து வந்த இக் கிராம மக்களின் பூர்வீகத்தை தற்போது, துறை முக அதிகார சபைக்கு சொந்தமான காணி எனக்கூறி குடியிருப்புகளை விட்டு வெளியேறுமாறும் கூறி வரும் துறைமுக அதிகார சபையினரின் எச்சரிக்கையால், அக் கிராம மக்கள் நிம்மதியை இழந்து தவிக்கிறார்கள்.

சுமார் 500 க்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் என குடிசைகள், தகரக் கொட்டில்கள், கல் வீடு என வாழ்ந்து வந்தாலும் மக்களின் தற்போதைய நிலையினை வைத்து துறைமுக அதிகார சபை காணிகளை அடாத்தாக அபகரிக்க முயல்கிறன்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுபான்மை சமூகம் எங்கிருக்கிறதோ அங்கெல்லாம் இந்தக் அரச காணி என்ற போர்வையிலும், தொல்பொருள் என்ற போர்வையிலும் தனியார் மக்களுடைய காணிகளை அபகரிக்க முற்படுகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தை பொறுத்தமட்டிலும் இவ்வாறான நிலைமைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், "குடியிருப்பு காணிகளை விட்டு வெளியேறா விட்டால் வீட்டை இயந்திரத்தை கொண்டு இடித்து தள்ளுவோம்" என்ற வசனத்தை கூட, துறைமுக அதிகார சபை ஊழியர்கள் அங்கு சென்று அம்மக்களை பதற்ற நிலைக்கு தள்ளியுள்ளனர். இதனால் அப் பகுதியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை 05.06.2022 அக் கிராம மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதில் கலந்து கொண்ட முதியோர் ஒருவர், இவ்வாறு கருத்து தெரிவித்தார்."சுமார் ஐம்பது வருட காலம் தொட்டு குடியிருந்து வந்த மக்களுக்கு சொந்தமான காணியை, துறைமுக அதிகார சபையினர் வந்து, நாங்கள் வசிக்கும் குடியிருப்பு காணியை விட்டு எழும்புமாறு, பல முறை இங்கு வந்து எச்சரித்து விட்டுச் சென்றனர்.

"1994ஆம் ஆண்டு காலப் பகுதியில் முன்னாள் ஜனாதிபதியாக இருந்த சந்திரிக்கா அம்மையார் காலத்தில், அப்போதைய கப்பல் துறை,புனர்வாழ்வு அமைச்சராக இருந்த மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பால் குறித்த கிராமத்தில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டார்கள். தற்போது துறைமுக அதிகார சபையினர் பலவந்தமாகக் காணிக்குள் புகுந்து, வெளியேறுமாறு மக்களிடத்தில் கூறுகின்றனர். இந்தக் காணியை விட்டு வெளியேற முடியாது. இதனை விட்டு வெளியேறி எங்கே செல்வது மக்கள் தெரிவிக்கின்றனர்.

"துறைமுக அதிகார சபையினர் அடாத்தாக அடிக்கடி வெளியேறுமாறு கோருகின்றனர். இல்லாது போனால் வீட்டை உடைத்து தள்ளுவதாகவும் கூறுகின்றனர். சுமார் 17 வருடங்கள் தொடர்ந்தும் இந்தக் கிராமத்தில் வாழ்ந்து வருகிறோம். இதனை விட்டு வெளியேறி நாம் எங்கே செல்வது" என்றார்.

கடந்த மாதம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், கிராம சேவகரின் அனுமதியின் பின்பே காணியில் வீடு அமைக்கப்பட்டு குடியிருக்கிறோம். தற்போது வீட்டை உடைத்து காணியை அபகரிக்க துறைமுக அதிகார சபையினர் அத்துமீறுவது சரியா? அரசாங்க அதிகாரிகளின் அறிவிப்புக்கு பின்னரே 17 வருடங்களாக வாழ்ந்து வருகிறோம். இப்போது காணியை விட்டு எழும்ப சொன்னால் எங்கே போவது? எங்களுக்கு நீதி வேண்டும். இதுவும் ஒடுக்கு முறையா? எங்களது வயிற்றில் அடிப்பதா அரசின் நோக்கம் எனவும் பதாகைகளை ஏந்தியவாறும் காணியை அபகரிக்காதே அபகரிக்காதே என்ற கோசங்களையும் இதன் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர்.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் இதில் கலந்து கொண்டதுடன் துறைமுக அதிகார சபையினரின் இவ்வாறான அடாத்தான நடவடிக்கையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறும் நீதியை நிலை நாட்டுமாறும் உரிய அதிகாரிகளிடத்தில் அம்மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அரசாங்க அனுமதியின் போதே இக்கிராம மக்கள் அன்றைய கால கட்டம் மாதிரிக் கிராமமாக குடியேற்றப்பட்டார்கள். பாடசாலை, தபாலகம்,கிராமிய வைத்தியசாலை என அரச கட்டடங்கள் கூட இங்கு இருந்து சேவைகள் இடம் பெற்று வரும் நிலையில், துறைமுக அதிகார சபை காணிகளை சுற்றி SLPA என்ற வாசகம் அடங்கிய எல்லைக் கல் இட்டும் 'இக் காணி துறைமுக அதிகார சபைக்கு சொந்தமானது அனுமதியின்றி உட்பிரவேசிக்க வேண்டாம்' போன்ற வாசகங்களும் கொண்ட பதாகை இடப்பட்டுள்ளது.

அம் மக்கள் நீர், மின்சாரம் ஆரம்ப பதிவு என அக்கிராமத்தில் உள்ள விலாசத்தை வைத்தே வாழ்ந்து வரும் நிலையில், இவ்வாறான காணி அபகரிப்பை மேற்கொள்வதை ஒரு போதும் ஏற்க முடியாது. பொருளாதார நெருக்கடிக்குள் நொந்து போய் வாழ்ந்து வரும் இம் மக்களின் அன்றாட ஜீவனாம்சமே கேள்விக்குறியாகியுள்ள நிலையில் இவர்களை காப்பாற்றுவது அரசின் கடமையல்லவா? அதை விடுத்து அதிகாரத்தை அப்பாவி மக்கள் மீது சுமத்தி துறைமுக அதிகார சபையினர் அப்பகுதியில் நுழைந்து மக்களை எச்சரிக்கையூட்டுகின்றனர்.

"2000ஆம் ஆண்டுக்கு முன் மண் வீடு குடிசையில் வாழ்ந்து வந்த நிலையில் எனக்கு



தனியார் மூலமாக வீடு கட்டி கொடுக்கப்பட்டது. ஆரம்பம் தொடக்கம் அந்த வீட்டில் வசித்தே திருமணம் முதல் பிள்ளைகளை பெற்று வாழ்ந்த நிலையில், இப்போது வெளியேறச் செல்கிறார்கள். மோட்டு வரி, நீர், மின்சாரம் போன்ற பட்டியல் கட்டணம் செலுத்தி வருகிறேன். கள்ளத்தனமாக குடியேறவில்லை. கிராம அதிகாரி மூலமாகவே குடியேறினேன். எனக்கு இந்தப் பூர்வீக குடியேற்றத்தை விட்டு வெளியேற முடியாது. பிரதமர், ஜனாதிபதி தீர்வினை தரவேண்டும்" என பாதிக்கப்பட்ட கிராமவாசி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறான சோகமான நிலைமைக்கு பாடசாலை செல்லும் மாணவர்கள் உட்பட குடும்பங்களை புறக்கணிப்பதை ஜீரணிக்க முடியாத ஒன்றாக விளங்குகிறது. அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கது. மக்களை நிம்மதியாக வாழ்வதற்கு வழி செய்ய வேண்டும். இப்படியான துறைமுக அதிகார சபையினரின் அடாவடித்தனக்கள் இனிமேலும் இடம் பெறாத வண்ணம் கப்பல் துறை கிராமம் இருக்க வேண்டும் என்பதை அம் மக்கள் விரும்புகின்றனர்.

இது மாத்திரமல்ல, திருகோணமலை மாவட்டத்தில் வாழும் சிறுபான்மை சமூகத்தின் காணிகளை, வேறு இடங்களிலும் இலங்கை சுற்றுலாத் துறை பணியகம், வனஜீவராசிகள் திணைக்களம் போன்றனவும் சுவீகரிப்புச் செய்துள்ளன. யுத்த சூழ் நிலையின் பின்னர், மக்கள் நிம்மதியாக வாழ்ந்த வந்த நிலையில் சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வண்ணம் செயற்படுகின்றனர்.

தொல்பொருள் என்கின்ற போர்வையிலும் காணி சுவீகரிப்பு இடம் பெறுகிறது.அப்பாவி மக்களின் காணிகளை இவ்வாறாக துறைமுக அதிகார சபை ஊழியர்களின் தொடர்ச்சியான அச்சுறுத்தல் மூலமாக, நிம்மதியாக குடியிருப்பு பகுதியில் வாழ முடியாது எனவும் ஒரு கிழமைக்கு குறைந்தது இரு தடவையேனும் கிராமத்துக்குள் வருகை தருவதாக தெரிவிக்கின்றனர்.

இக் கிராம மக்களின் நிலை அறிந்து காணிகளை கையகப்படுத்தாதளவுக்கு அவர்களுடைய பூர்வீகமான இடங்களில் வாழ்வதற்கான வசதிகளை தொடர்ந்தும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான முயற்சிகளை உரிய அரசாங்க தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அக்கிராம மக்களின் ஒரேயொரு கோரிக்கையாகும்.



விளையாட்டுப் போட்டிகளில் அசத்தும்

# செல்லப்பிள்ளை

## 97 வயது இளைஞனின் சாதனைகள்



அ. அச்சுதன்

அல்பேட் நோயல் செல்லப்பிள்ளைக்கு 97வயது. இந்த வயதில் இவர் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி சாதனை படைத்து வருகின்றார். இச்சாதனையாளன் 05.09.1924இல் மட்டக்களப்பில் பிறந்து, மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் கல்விகற்று 24 வயதில் அரச சேவையில் இணைந்து கொண்டார். கண்டி, பதுளை, அம்பாறை, மட்க்களப்பு மாவட்டங்களில் கச்சேரியில் எழுதுவினைஞராக பணியாற்றியுள்ளார்.

1964ஆம் ஆண்டு திருகோணமலை கடற்படைத்தளத்தில் சிவில் அலுவலகத்தில் கணக்குப் பரிசோதகராக பணி உயர்வு பெற்று, திருகோணமலையில் சேவையாற்றி 1974ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் திருகோணமலை உவர்மலையை நிரந்தர வசிப்பிடமாக்கிக் கொண்டார்.

பாடசாலைக் காலத்தில் 13 வயதில் அல்பிரட் நோயல் செல்லப்பிள்ளை, திறந்த விளையாட்டுப் போட்டிகளில் மரதன் ஓட்டங்களில் பங்கு கொண்டு தனது விளையாட்டு வெற்றியை ஆரம்பித்தார். அன்றில் இருந்து இன்றுவரை விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்து வருகின்றார்.

97 வயது இளைஞனின் பல்வேறு சாதனைகளை பதிவு செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகும். 1974 ஆம் ஆண்டில் இருந்து இவரின் சாதனை பயணம் தொடர்கின்றது.

> **இன்றும் விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். இவ்வருடம் நடைபெற இருக்கும் போட்டிகளில் தான் கலந்து கொள்ள இருப்பதாகவும் தான் தமிழன் என்று குறிப்பிடுவதில் மிகவும் பெருமை அடைவதாகவும் சிரித்த முகத்துடன் குறிப்பிட்டார்**

2015ஆம் ஆண்டு கம்பஹா மாவட்ட முதுநிலை மெய்வல்லுனர் சங்கம் 4 வது திறந்த முதுநிலை மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டிகளில் அல்பேட் நோயல் செல்லப்பிள்ளை 5,000 மீற்றர் வேக நடையிலும், 200 மீற்றர் ஓட்டப்போட்டி, ஈட்டி எறிதல் போன்றவற்றில் முதலிடத்தை பெற்றார். 2014இல் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்களில் நடைபெற்ற மேற்குறிப்பிட்ட போட்டிகளிலும் பிரிவுகளிலும் இவர் முதல் இடங்களை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 2014ஆம் ஆண்டு நுவரெலியாவில் நடைபெற்ற போட்டியிலும் 5,000 மீற்றர் வேகநடை மற்றும் 100 மீற்றர், 200 மீற்றர் நீளம் பாய்தல் போட்டிகளிலும் பங்கு கொண்டு தங்கப் பதக்கங்களை

> **வடக்கு, கிழக்கில் இவர் போன்று இன்னும் அதிசிறந்த வீரர்கள் வெளிஉலகிற்கு வெளிப்படத்தப்படாமல் இருக்கின்றனர். இவரை இன்னும் பலர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். இவரின் திறமையினை இளம் வீரர்களுக்கு தெரியப்படுத்தவேண்டும்**

பெற்றிருந்தார்.

2018 ஆம் ஆண்டுக்கான மத்திய மாகாண திறந்த சம்பியன் போட்டி நாவலப்பிட்டி மைதானத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் 5,000 மீற்றர் வேகநடை, 200 மீற்றர் ஓட்டம், 100 மீற்றர் ஓட்டம், ஈட்டி எறிதல் ஆகிய போட்டிகளில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். 90 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டிகளில் அதிசிறந்த வீரருக்கான விருதுகளை வென்றவர் அல்பிரட் நோயல் செல்லப்பிள்ளை.



97 வயதான செல்லப்பிள்ளை, இலங்கையில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை சார்பாக பங்கு பற்றி பல பதக்கங்களை பெற்றுள்ளார். குறிப்பாக, 1994 ஆம் ஆண்டில் கனடா நாட்டில் நடந்த போட்டிகளில் குறிப்பார்த்துச்சுடல் போட்டியில் முதல் இடத்தைப் பெற்று நாட்டிற்கும் திருகோணமலை மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்திருந்தார்.

குறிப்பாக பிரான்ஸ் , மலேசியாவில் நடைபெற்ற முதியோருக்கான பல போட்டிகளில் பங்கு பற்றி



பல பதக்கங்களையும் உயர் விருதுகளையும் பெற்றுள்ளார்.

வடக்கு, கிழக்கில் இவர் போன்று இன்னும் அதிசிறந்த வீரர்கள் வெளிஉலகிற்கு வெளிப்படத்தப்படாமல் இருக்கின்றனர். இவரை இன்னும் பலர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். இவரின்

> **கண்டி, பதுளை, அம்பாறை, மட்க்களப்பு மாவட்டங்களில் கச்சேரியில் எழுதுவினைஞராக பணியாற்றி, 1974ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் திருகோணமலை உவர்மலையை நிரந்தர வசிப்பிடமாக்கிக் கொண்டார்**

திறமையினை இளம் வீரர்களுக்கு தெரியப்படுத்தவேண்டும். இவர் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். தமிழர் ஒருவர் இது போன்ற சாதனையை நிகழ்த்தி வருவது ஒரு சாதாரணவிடயம் அல்ல. 97 வயதிலும் இன்றும் விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். இவ்வருடம் நடைபெற இருக்கும் போட்டிகளில் தான் கலந்து கொள்ள இருப்பதாகவும் தான் தமிழன் என்று குறிப்பிடுவதில் மிகவும் பெருமை அடைவதாகவும் சிரித்த முகத்துடன் குறிப்பிட்டார்.

6 ஆண் பிள்ளைகளின் தந்தையாகிய இவர் தொடர்ந்தும் விளையாட்டுத்துறையில் தனது திறமையை வெளிப்படுத்தி வருகின்றார். இதுவரை இவர் சுமார் 80 பதக்கங்களையும் பல உயர் விருதுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வழக்கறிஞரின் அதிகாரத்தை ரத்து செய்வதற்கான அறிவிப்பு**

இலக்கம் 65, ஒய்படவத்தை சுற்றறிக்கை வீதி, பெந்தோட்டையைச் சேர்ந்த நான் வாடியா பத்திரகே காமினி ஜயவீர, 196326201744 (632621744 V) என்ற தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பவர், ஸ்ரீமாலி ரோஹன பப்ளிக் நன்சிபுல், கொழும்பு, பப்ளிக் நன்சிபுல், சிங்ஹே புனாகே அவர்களின் சான்றளிக்கப்பட்ட எண் 471 ஐக் கொண்ட பவர் ஆஃப் அட்டர்னியை நிறைவேற்றினார். ஜயவீர, இலக்கம் 65, ஒய்படவத்தை சுற்றுவட்ட வீதி, பெந்தோட்டையில் தேசிய அடையாள அட்டை இல. 571460807 V) வைத்திருப்பவர் எனது சட்டத்தரணி, மார்ச் 17, 2013 தேதியிட்ட பவர் ஆஃப் அட்டர்னி எண். 471 இன்று முதல் ரத்து செய்யப்படுகிறது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வாடியா பத்திரகே காமினி ஜயவீர**







# எரிந்துபோன மனிதாபிமானம்

நூருல் ஹுதா உமர்
umarhutha@gmail.com

**சுதந்திர இலங்கை வரலாற்றில் என்றுமில்லாத வரிசைகள், எரிபொருளை பெற நாட்டின் எல்லா பாகங்களிலும் காத்து நிற்கின்றன. படித்தவன், பாமரன், முக்கியஸ்தர் எனப்பலரும் வரிசையில் சமனாக நிற்கிறார்கள். ஒரே தண்ணீர் போத்தலை மாறிமாறிப் பருகிக்கொண்டும், ஒரே பிஸ்கட் பக்கட்டை பகிர்ந்து சாப்பிட்டுக்கொண்டும் பொழுதைக் கழிக்கிறார்கள். ஆனாலும் இதனை கூர்ந்து கவனித்தால் ஓர் ஆச்சரியம் இருக்கிறது.**

நிறைந்த பணக்காரனின், முக்கிய அரசியல்வாதிகளின், அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களின் வாகனங்களை எரிபொருள் பெற காத்திருப்போர் வரிசையில் காணவில்லை. மண்ணெண்ணெய்க்காக பல மணிநேரம், நிறைமாத கர்ப்பிணிகள் கூட வரிசையில் நிற்கிறார்கள். அங்கவீனர்கள், முதியோர்கள் ஏன் பாடசாலை சிறுவர்கள் கூட 'போலிவில்' தவிக்கிறார்கள். இந்த வரிசைகளில் அநேக இடங்களில் மனிதாபிமானம் இறந்து போனதும், சில இடங்களில் மனிதத்தன்மை வெளிப்பட்டதும் காலம் காட்டிய கோலமாக மலர்ந்திருக்கிறது. சமூக வலைத்தளங்களில் பாலகர்களின் நிலைகள் நெஞ்சுருக வைக்கும் அளவுக்கு பரிதாபமாக இருக்கிறது. வரிசையில் காத்திருந்த பல உயிர்கள் ஆண்டவன் காலடியை சென்றடைந்தும் இருக்கின்.

நீண்டவரிசையில் காத்திருந்தும் இப்போதைய நாட்களில் இடைநடுவில் எரிபொருள் இல்லாமல் கலைகிறது. ஆனாலும் சில இடங்களில் நள்ளிரவில் வெளியிடங்களுக்கு கலன்களில் அடைக்கப்பட்டு கடத்தப்படும் எரிபொருளை கடந்துதான் ஒவ்வொருநாளும் விடிகிறது என்றால் சிலர் கோபிக்கலாம். ஆனால் பெரும்பாலும் உண்மை அதுதான். மனசாட்சியை அடகுவைத்துவைத்து தலைக்கேறிய மமதையுடன் சில செட்காரர்கள் (எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள்) நடந்து கொள்கிறார்கள் எனும் குற்றச்சாட்டு இன்றைய நாட்களில் மலிந்து காணப்படுகிறது. இருந்தாலும் பல எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் இறைவனுக்கும், மனச்சாட்சிக்கும் பயந்து நடந்து கொள்வதும் இல்லாமல் இல்லை. எரிபொருளை பதுக்கும் வாழ்க்கையாளரும் பதுக்கும் விற்பனையாளரும் மரணித்தால் அதன் பயனை தனது மரணக்குழி வரை கொண்டுசெல்ல முடியாது என்பதை மறந்தே விட்டார்கள்.

நிறைந்த பணத்துக்கு குறைந்த எரிபொருளை பொதுமக்கள் பெறவேண்டிய நிலையில் எரிபொருளுக்காக மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வரும் சூழ்நிலையில் கிழக்கு மாகாணத்தில் இருந்து மேல்மாகாணம் அடங்களாக பல்வேறு மாகாணங்களையும் நோக்கி இரவு நேரங்களில் சொகுசு வாகனங்களிலிலும், பொதுமக்கள் பயணிக்கும் பஸ்வண்டிகளிலும் பெற்றோல், டீசல் உட்பட பல்வேறு வகையான எரிபொருட்கள் கலன்களில் அடைந்து செல்கிறதாக முக்கிய பிரமுகர் ஒருவர் தனது அனுபவத்தை அண்மையில் பகிர்ந்துகொண்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் கலன்களில் அடைக்கப்பட்ட எரிபொருள் மட்டுமின்றி நிரப்பப்பட்ட சமையல் எரிவாயுக்களும் நான் பயணித்த பொதுமக்கள் பயன்பாட்டு வாகனத்தின் இருக்கைகளுக்கு கீழ் அமைக்கப்பட்டுள்ள களஞ்சிய பகுதியில் வைத்து கொழும்புக்கு எடுத்துவரப்பட்டது. பயண முடிவில் என்னுடைய பயணப்பொதிகளை எடுக்கும் போதே அதை அறிந்து மிகவும் பயந்தேன் என்றார்.

சொந்த வாகனத்தில் செல்ல எரிபொருள் தட்டுப்பாடு இருந்த காரணத்தினால் நான் ஊரிலிருந்து தலைநகருக்கு பயணித்த சொகுசு பேருந்தில் எரிபொருள் நிரப்பப்பட்ட கலன்கள் 20-25ம், சமையல் எரிவாயு 20-30 உம் இருந்ததை பயண முடிவில் என்னுடைய பயணப்பொதிகளை எடுக்கும் போது கண்டேன். பஸ்ஸில் குளிரூட்டி முழுமையாக அன்றிரவு முழுவதும் தொழிற்பட்டுக்கொண்டிருந்தது. அமுக்கம் அல்லது சூடாகி இவை தீப்பற்றியிருந்தால் அல்லது விபத்தொன்று நடந்து பஸ் தீப்பிடித்திருந்தால் நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதை கற்பனை கூட பண்ணிப்பார்க்க முடியாதளவில் கொடூரமாக இருந்திருக்கும் என அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்த பதவியொன்றில் இருக்கும் உயரதிகாரி என்னிடம் தெரிவித்தார்.

இப்படி கருப்புச்சந்தையில் டீசல் 800-1000 வரையும் பெற்றோல் 650-1000 ரூபாய்க்கும் மண்ணெண்ணை 200- 250 ரூபாய்க்கும், சமையல் எரிவாயு 25000 ரூபாய் வரையும் கருப்பு சந்தையில் வியாபாரம் நடப்பதாக அறிய முடிகிறது. ஊருக்கு வரும் எரிபொருள் எல்லாம் கொழும்புக்கும், கண்டிக்கும் இரவு பஸ்ஸில் ட்ரிப் போகுது, தட்டுப்பாடேவேண்டியவர்கள் குளிரூட்டி அறையில் சுகமாக அமர்ந்து வேடிக்கை பார்க்கிறார்கள். சில இடங்களில் நண்பர்கள், முக்கியஸ்தர்களுக்காக பாதுகாப்பு வேலிகள் கூட செட்டை பதம் பார்க்கிறது என பொதுமக்கள் பலரும் ஆதங்கப்படும் நிலை நாடுமுழுவதிலும் இருக்கிறது. சில முக்கிய அதிகாரிகள் தனது அதிகாரத்தை பயன்படுத்தி மொத்தமாக எரிபொருளை கொள்வனவு செய்து கருப்பு சந்தையில் அதிக விலைக்கு விற்கிறார்கள் என்றால் நாம் நம்பித்தான் ஆகவேண்டியிருக்கிறது. அப்படி காலம் கெட்டுபோகி இருக்கிறது.

வரிசையில் பல நாட்களாக, பல மணித்தியாலங்களாக காத்திருந்து இறுதிநேரத்தில் எரிபொருள் கிடைக்காத பொதுமகன், நீங்கள் செய்வது உங்களுக்கே சரியாக தெரிகிறதா? பெற்றோல் முடிந்துவிட்டது என சொல்லி செட்டை மூடினீர்கள். இன்று காலையில் புதிய விலையில் பல நிரப்பு நிலையங்கள் காலையில் எரிபொருளை வழங்குகிறது. விலை கூட்டியதோ இன்று காலை 3 மணிக்கு. அப்போ உங்களுக்கு புது விலையில் பௌசர் எப்போ வந்திச்சு? இந்த நாட்டில் மக்கள் படும் துன்பத்துக்கு அரசியல்வாதிகள் எவ்வளவு காரணமோ அதே பங்கு இந்த முதலாளிகளுக்கும் உண்டு. சாதாரணமாக கிடைக்கும் லாபத்திற்கு மேலதிகமாக நீங்க பெற்றோலுக்கு லீற்றர் ஒன்றிற்கு 82 ரூபாவும், டீசலுக்கு லீற்றர் ஒன்றிற்கு 111 ரூபா அளவிலும் விலை மாற்றத்தால் மட்டும் கொள்ளை இலாபம் உழைக்குறீங்க. அரசியல்வாதிகள் மீது மக்களுக்கு இருக்கும் கோவம் உங்களை நோக்கி திரும்பினால் என்னவாகும் என யோசித்து பாருங்க. இது பெற்றோல் செட் முதலாளிகளுக்கு மட்டுமல்ல, எல்லா முதலாளிகளுக்கும் தான். நீங்களும் இந்த சமுதாயத்தில் தான் வாழ்கின்றீர்கள். உங்கள் பிள்ளைகளுக்கு பாவச்சொத்தை சேர்த்து வைத்துவிட்டு போகாதீங்க. யுத்த காலத்தில் கூட எம்மக்கள் பரஸ்பரம் தங்களிடமிருந்ததை பகிர்ந்து ஒருவொருக்கொருவர் உதவியாக வாழ்ந்தார்கள் எனும் ஆதங்கத்தை கொட்டிய பொதுமகனின் ஆதங்கத்தில் ஆயிரம் அர்த்தங்கள் புதைந்துள்ளது.

இன்று உலகம் சுற்றுவது எரிபொருளில் என்றாகிவிட்டது. எரிபொருள் விலை கூடினால் எல்லாவற்றின் விலையும் கூடுகிறது. எரிபொருள் கிடைக்காமல் விட்டால் எல்லாமே ஓய்வாகிவிடுகிறது என்பதே இன்றைய காலத்தில் இயற்கையின் நியதியாகி இருக்கிறது. இவற்றை தீர்க்கும் நோக்கில் நாம் என்னதான் திட்டம் தீட்டினாலும் அது தோல்வியடைகிறது. இப்போது நாட்டில் பெற்றோல், டீசல் இல்லை என்றாகிவிட்டது. காணும் இடம் எல்லாம் வாகனங்களின் அணிவரிசை. செட் ஓனர்களுக்கு கூட எப்போது பெற்றோல் கிடைக்கும் என்பது தெரியாத நிலை. ஏன், பெற்றோலிய துறை அமைச்சருக்கு கூட தெரியாது. இவ்வாறான இக்கட்டான நிலையில் பயோ டீசல் (BIO DIESEL) பற்றிய உரையாடல்கள், தேடல்கள் சூடு பிடிக்க தொடங்கி இருக்கின்றன.

நிறைய வளர்ச்சி அடைந்த நாடுகளில், இந்தியாவில் கூட இப்போது பெற்றோல் டீசலுக்கு மாற்றீடாக பயோ டீசல் பாவிக்கப்படுகிறது. இதன் ஆரம்ப உற்பத்தி செலவு கொஞ்சம் அதிகம் என்பதால் இந்த தொழிற்துறை அவ்வளவு பிரபல்யம் அடையவில்லை. ஆனால் நமது நாடு இருக்கும் இக்கட்டான நிலையில் இந்த மாற்றீடு சில வேளை நல்ல தெரிவாக இருக்கும். பெரிய ஹோட்டல்களில், உணவகங்களில் ஏராளமான சமையல் எண்ணெய் வீணாகும். ஒரு முறை பாவித்த எண்ணெயை, மீண்டும் ஒரு முறை அவர்கள் பாவிக்க மாட்டார்கள். கொட்டிவிடுவார்கள். ஆனால், நமது நாடுகளில் இவ்வாறு உபயோகிக்கப்பட்ட சமையல் எண்ணெயை, சிறு ஹோட்டல்காரர்கள், சாலையோர கடைக்காரர்கள் குறைந்த விலைக்கு வாங்கிச் சென்று பயன்படுத்துகிறார்கள். கொத்து ரொட்டி, பரோட்டா மா பிசைய பாவிக்கிறார்கள். பலமுறை ஒரே சமையல் எண்ணெய்யை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவது உடல் நலத்துக்கு மிகவும் கேடு என்று சொன்னாலும் யாரும் கேட்பார் இல்லை.

அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில், உணவகங்கள் பயன்படுத்திய சமையல் எண்ணெயை மொத்தமாக சேகரித்து எடுத்துப்போய் பயோ டீசல் செய்கிறார்கள். வழக்கமான சுத்திகரித்த 10:1 எனும் விகிதத்தில் மெதனாலுடன் கொஞ்சம் சோடியம் ஹைட்ரொக்ஸைடை கலந்து புராசஸ் செய்கிறார்கள். காய்ச்சி எடுக்கிறார்கள். கிட்டத்தட்ட 100 லிட்டர் பாவித்த சமையல் எண்ணெயிலிருந்து 100 லிட்டர் பயோடீசலும், 10 லிட்டர் கிளிசராலும்/கிளிசரின் எடுக்கிறார்கள். கிளிசராலை மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கும், பயோடீசலை வாகனங்களுக்கும் விற்பனை செய்கிறார்கள். இப்படி அமெரிக்காவில் மட்டும் ஒரு நாளைக்கு 64000 பெரல் பயோடீசல் தயாரிக்கிறார்கள். ஜேர்மனியில் 55000. நமது அண்டை நாடான இந்தியாவில் சுமார் 2000 பெரல்கள். முழு இந்தியாவிலும் உணவகங்களில் பாவிக்கப்படும் எண்ணெயை எடுத்தால் ஆண்டுக்கு 100 கோடி லிட்டர் பயோடீசல் கிடைக்குமாம் என்பது தகவல் என வைத்தியரொருவர் தெரிவித்த விடயத்தை இங்கு அடிக்கோடிட்டு காட்டுகிறேன்.

நமது நாட்டிலும் தற்போது இந்த பயோ டீசல் பேசுபொருளாகி உள்ளது. அநுராதபுரத்தை சேர்ந்த வைத்தியர் ஒருவர், தற்போது ஒரு வருட காலமாக காட்டு ஆமணக்கு விதைகளில் இருந்து பெறப்பட்ட பயோடீசலை பாவிக்கிறார் என்ற செய்தி அண்மையில் பிரபல்யம் அடைந்திருந்தது. அது போல இன்னும் சிலரின் பயோ டீசல் உற்பத்தி முயற்சிகளும் தற்போது ஊடக வெளிச்சத்திற்கு வந்திருந்தன. நமது நாட்டில், நமது பகுதிகளில் இப்படியான முயற்சிகளை ஆர்வமுள்ளவர்கள் ஆரம்பிக்க முடியும்.

இதன் மூலம் ஹோட்டல்களில், வீடுகளில் பாவித்த சமையல் எண்ணெய்யை மீண்டும் மீண்டும் உபயோகப்படுத்துவதை தடுக்க முடியும். அதன் மூலம் நிறைய மாரடைப்புக்களை பாரிசவாதங்களை, புற்றுநோயை, கொலஸ்ட்ரோலை சமூகத்திலிருந்து அகற்ற முடியும். தற்போது நாட்டில் நிலவும் பெற்றோல் டீசல் தட்டுப்பாட்டை இந்த பயோ டீசல் மூலம் ஓரளவாவது நிவர்த்திக்க முடியும். நல்ல வருமானம் கிடைக்கும். சூழல் பாதுகாப்பு. பெற்றோல் டீசல் போல இந்த பயோ டீசலில் சுற்றுச் சூழல் பாதிப்பு இல்லை என்பதால் சிறந்த மாற்றீடு என்று அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

எரிபொருள் நெருக்கடிக்கு பிரதான காரணம் பிரதமரின் பயமுறுத்தும் முன்னறிவிப்புக்களும், குறித்த அமைச்சுக்கான அமைச்சரின் கருத்துக்களும் பொறுப்பற்ற விதத்தில் இடம்பெறும் பதுக்கல்களுமே. எரிவாயு விநியோகம் மற்றும் இறக்குமதி தொடர்பில் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது பதுக்கி வைப்பவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த ஜனாதிபதி அறிவுறுத்தியிருந்தார். நாட்டுக்கு தற்போது கிடைத்துள்ள மற்றும் அடுத்த சில நாட்களுக்குள் பெறப்படவுள்ள எரிபொருள் கையிருப்புக்களை நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முறையாக விநியோகிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதன்போது பணிப்புரை விடுத்திருந்தார். அது மட்டுமின்றி நிதி அமைச்சும் மத்திய வங்கியும் அரச மற்றும் தனியார் வங்கிகளுடன் இணைந்து போதியளவு எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக கடன் கடிதங்களை வழங்குவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார். இதன்போதுதான் வழங்குனர்களுடனான நீண்ட கால எரிபொருள் விநியோக ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கான சாத்தியம் குறித்து சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

எரிபொருள் விநியோகத்தில் பொதுப் போக்குவரத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் பயன்படுத்தி, தனியார் மற்றும் சுற்றுலா பேருந்துகள் மற்றும் பாடசாலை வாகனங்களுக்கு பொலிஸாரின் மேற்பார்வையின் கீழ் எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார். ஆனால் இவைகளெல்லாம் முறையாக நடந்ததா என்ற கேள்வி எம்மிடம் இருக்கிறது.

ஏனைய அத்தியாவசிய சேவைகளுக்காக அடையாளம் காணப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மூலம் தொடர்ந்தும் எரிபொருளை விநியோகிக்கவும், இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பாதுகாப்பை வழங்கவும் அரசினால் தீர்மானிக்கப்பட்டது. தேவையில்லாமல் எரிபொருளை பதுக்கி வைப்பவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமல்படுத்தவும் பாதுகாப்பு படையினருக்கு உத்தரவிடப்பட்டது. தற்போதுள்ள எரிவாயு கையிருப்புக்களை முறையாக விநியோகிப்பதற்கும் போதுமான எரிவாயு கொள்ளளவை முன்கூட்டியே பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்வது குறித்தும் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி அனுர திஸாநாயக்க, நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரன, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராச்சி, பொலிஸ் மா அதிபர் சி.டி விக்கிரமரத்ன ஆகியோருடன் பாதுகாப்பு, எரிபொருள், மின்சாரம் மற்றும் எரிவாயு தொடர்பான நிறுவனங்களின் தலைவர்களும் கூடி கலந்துரையாடப்பட்டது. ஆனாலும் அது தேனீர் கூட்டமாக முடிந்ததே தவிர கூறிக்கொள்ளுமளவுக்கு பெரிதாக ஒன்றும் நடக்கவில்லை.

நாட்டுக்கு வரவிருந்த டீசல் மற்றும் பெற்றோல் கப்பல்கள் தாமதமாகும் என எரிசக்தி அமைச்சு தெரிவித்தால் அடுத்தநாள் காலை எரிபொருள் நுகர்வோரினால் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் உள்ள வீதிகள் முடங்கும் அபாயம் நாட்டில் எல்லா இடங்களிலும் நிலவுகிறது. பெற்றோல் கிடைக்குமோ அல்லது கிடைக்காதோ என்ற ஏக்கத்தில் தற்போது எரிபொருளுக்காக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அதிகாலை 3 மணி தொடக்கம் எரிபொருளை பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசைகளில் காணப்படுகின்றனர் எரிபொருளுக்காக தினமும் மக்கள் காத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. நாட்டில் பெரும்பான்மை இடங்களில் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பல்வேறு எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருப்பதுடன் எரிபொருள் உரிமையாளருக்கும் பொதுமக்களுக்கும் முறுகல் நிலையும் ஏற்படுகின்றது.

இங்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ள போதிலும் மக்கள் பொறுமையை இழக்க நேரிடுகிறது. இதனால் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு சுமார் 5 தொடக்கம் 10 நாட்களுக்குப் பின்னர் மண்ணெண்ணெய் விநியோகிக்கபடுவதுடன் ஒருவருக்கு 300 முதல் 500 ரூபாய்க்கு மாத்திரமே வழங்கப்படுகின்றது.

நூற்றுக்கணக்கான பொதுமக்கள் நீண்ட வரிசையில் நின்று அசௌகரியங்களுக்கு மத்தியில் மண்ணெண்ணெய்யை கொள்வனவு செய்வதையும் அவதானிக்க முடிந்தது. சில மாவட்டங்களில் அம்மாவட்ட அரசாங்க அதிபரின் வழிகாட்டலில் பிரதேச செயலக ரீதியாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பிரதேச செயலாளர்களினால் அட்டைகள் வழங்கப்பட்டு குறித்த அட்டைகளுக்கு பெற்றோல் விநியோகிக்கப்படுகின்றது.

இதனால் அங்குள்ள பல்வேறு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அரச திணைக்களங்களில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் மிக நீண்ட வரிசைகளில் நின்று பெற்றோலைப் பெற்றுக் கொண்டுள்ளனர். மேலும் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களுடான டீசல் விநியோகமும் மேற்கொள்ளப்பட்டது. சுமார் ஒரு கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்தில் மிக நீண்ட வரிசையில் வாகனங்களுடன் காத்து நின்று டீசலைப் பெற்றுக்கொண்டனர்.

பல பகுதிகளிலும் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பெற்றோலை பதுக்கி வைத்திருப்பதாக தெரிவித்து பொது மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது இக்காலத்திலும் சிலரின் மனம் எப்படி இருக்கிறது என்பதை அப்பட்டமாக காட்டுகிறது. எரிபொருள் தேவை அதிகரித்துள்ளதுடன் மக்கள் நீண்ட வரிசைகளில் பல மணி நேரமாக காத்திருந்து எரிபொருட்களை பெற்று செல்கின்றனர். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குறிப்பிட்ட எரிபொருட்கள் விநியோகிக்கப்படும் என பெற்றோலிய கூட்டுத்தாபனம் முன்கூட்டியே அறிவித்து வருகின்ற நிலையில் எரிபொருளை பெற்றுக்கொள்ள காலநேரமெதுவுமின்றி மக்கள் நீண்ட வரிசைகளில் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் காத்திருக்கின்றனர். அதன் போது அனைவருக்கும் எரிபொருட்களை பகிர்ந்தளிக்கும் முகமாக சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் 1000 முதல் 2000 ரூபாய்க்கே எரிபொருட்கள் வழங்கி வைக்கப்படுகின்றது. அதனால் பல மணி நேர காத்திருப்பின் பின்னரும் மக்களுக்கு 2 முதல் 3 லீட்டர் வரையான எரிபொருட்களே பெற முடிந்துள்ளதாக குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இது தவிர வேளாண்மை அறுவடை, விவசாயிகளின் விவசாய நடவடிக்கை பாதிப்பு, மீனவர்களுக்கு எரிபொருட்களை சீராக பெற்றுக்கொள்ள சிரமப்படுதல், போக்குவரத்தில் சிரமம், சேவைகள் வழங்குவதில் தாமதம், உட்பட பல்வேறு காரணங்களை தெரிவிக்கும் மக்கள் இதனால் பல்வேறு அசௌகரியங்களையும், விலையேற்றங்களையும் சந்தித்துள்ளனர். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முறைகேடாக எரிபொருள் விநியோகம் நடைபெறுவதாகவும் இவ்விடயங்களில் அரசாங்க அதிகாரிகள் பாராமுகமாக இருப்பதாகவும் தெரிவித்து எரிபொருளுக்கு காத்திருந்தோர்கள் அரச உயரதிகாரிகளை சந்தித்து எரிபொருள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்த சம்பவங்களும் ஆங்காங்கே அரங்கேறின

இரவு நேரங்களில் முறைகேடாக எரிபொருள் வழங்கப்படுவதாகவும், பாதுகாப்புக்கு நிற்கும் பாதுகாப்புப் படையினர் இந்த செயலுக்கு துணைபோவதாகவும், பொலிஸார் தமது நண்பர்களின் வாகனங்களை கொண்டுவந்து எரிபொருள் நிரப்பி கொடுப்பதாகவும் தெரிவித்த பொதுமக்கள் எரிபொருள் வழங்குவதற்கு ஒரு முறையான பொறிமுறையை உருவாக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

இப்படியான கோரிக்கைகளுக்கு இணங்க சாய்ந்தமருது பிரதேச பிரச்சினைக்கு தீர்வை காணும் நோக்கில் சாய்ந்தமருதிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேச மக்களுக்கு மட்டும் கிழமையில் ஒருநாள் தனியாக எரிபொருள் வழங்க பிரதேச செயலத்தில் பிரதேச செயலாளர், ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகிகள், அரச உயர் அதிகாரிகள், பொலிஸார், எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏனைய நாட்களில் வழமை போன்று சகலருக்கும் எரிபொருள் வழங்கவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதில் நிறைய சிக்கல்கள் இருந்ததை எண்ணி எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் அந்த கூற்றை நிராகரித்தார். இப்படி எந்தவகையான முடிவையும் கண்களை மூடிக்கொண்டு எடுக்கும் நிலைக்கு இலங்கை எரிபொருள் தட்டுப்பாடு மாறியிருக்கிறது.

தேர்தல் வாக்குண்டியலுக்காக எங்களுக்கு அரபு நாட்டு எண்ணெய் தேவையில்லை என்ற இனவாத சிந்தனை கொண்டோர்களை நாடு இப்போது தேடிக்கொண்டிருக்கிறது. இனவாதமாக செயற்பட ஜனாதிபதிக்கும், அமைச்சரவைக்கு, அரசுக்கும் ஆலோசனை வழங்கியதுடன் மட்டுமல்லாது பல நூறு முஸ்லிம் ஜனாஸாக்களை எரித்தவர்கள் இப்பொது இருக்கும் நாட்டின் நிலைக்கு பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளார்கள். இவர்களின் முறையற்ற முகாமைத்துவம் தான் நாட்டின் இன்றைய நிலைக்கு காரணம். உதவியாக, நன்கொடையாக வந்த நிறைய அரபு நாட்டின் ஸதக்காக்களை இனவாத சாயம்பூசி, தீவிரவாத முத்திரை குத்தியோர் இன்று டொலர் தேடியலைவதும், எண்ணெய் பெற அரபு தேசங்களுக்கு படையெடுப்பதும் ஆச்சரியமாக இல்லை. நகைப்புக்குரியதாகவே மாறியிருக்கிறது.

470 ரூபாய்க்கு சந்தையிலும், 1200 ரூபாய்க்கு மேல் கருப்பு சந்தையிலும் பெற்றோலை வாங்கும் சேவை வழங்குநர்களும், வியாபாரிகளும் அதன் மூலம் வழங்கும் சேவை கட்டணத்தை பலமடங்கு கூட்டியிருப்பதனாலும், விலைகள் ஏறியிருப்பதனாலும் நேரடியாக பாதிக்கப்பட்டது சர்வதேச வங்கிகளில் கருப்புப்பணத்தை பதுக்கி வைத்திருப்பார்கள் அல்ல. சாதாரண மக்களே.





## கொள்கை இல்லாத திட்டங்களால்

# கொள்ளையடிக்கப்படும் பணம்



ஏ.எச்.ஏ. ஹூஸைன்

husseinmedia000@gmail.com

இலங்கையர்கள் தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி, எரிபொருள் பற்றாக்குறை, அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு, அதிகரித்த விலை, உணவுப் பஞ்சம் என இந்த ஒட்டு மொத்த நெருக்கடியும் செயற்கையானதா அல்லது இயற்கையானதா என்ற வாத விவாதங்களுக்கப்பால், மக்கள் விரக்தியின் விளிம்புக்கே சென்று கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான் உண்மை.

இலங்கை, தற்போது மனிதாபிமான நெருக்கடியின் விளிம்பில் உள்ளது என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியால் இலங்கையிலுள்ள 70 சதவீதம் குடும்பங்கள், தங்களது தினசரி உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்கே சிரமப்படும் சூழ்நிலை நிலவி வருவதாகவும், மக்களால் தாங்கள் முன்பு வாங்கி வந்த பொருட்களை இப்போது வாங்க முடியவில்லை எனவும் எனவே, மக்கள் உணவு உண்பதையும் குறிப்பாக சத்தான உணவு உண்பதை குறைக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். ஊட்டச்சத்து குறைபாடு நாட்டின் மிகப் பெரிய பிரச்சினை என்ற நிலையை நோக்கி நகர்கிறது என யுனிசெஃப்பின் இலங்கைக்கான பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக் கூறுகிறார்.

உங்களிடமுள்ள எதையாவது எங்களுக்கு இலவசமாக அல்லது கடனாகத் தருகிறீர்களா என்று உலக நாடுகளிடம் மண்டியிடுவதுதான் இலங்கையின் தேசிய கொள்கையாகிவிட்டது என்று கேலியும் கிண்டலும் ஒரு புறம்.

இந்த நிலைமையால் இரண்டாயிரம் வருடங்களுக்கு மேற்பட்ட பூர்வீகத்தையும் பல்வேறு இன, மொழி, கலாசார, பாரம்பரியத்தையும் கொண்ட இலங்கையர் நாம் என்று பெருமை பாராட்டிக் கொள்வதிலும் தலை குனிவு ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கை என்றாலே உலக நாடுகள் முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டு, கதவை மூடுமளவிற்கு ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் அவமானத்தைத் தேடித் தந்திருக்கின்றன என்று ஏறாவூர் நகர சபையின் மாதாந்த அமர்வில் சொல்கிறார் ஏறாவூர் நகர சபைத் தலைவர் எம்.எஸ். நழிம்.

இவை எல்லாம் இனவாதத்தின் இழி குணங்களால் ஏற்பட்டன என்பதுதான் யதார்த்தம். இதனை பூர்வீகம் என்று பேசி பெருமைப்பட்டுக் கொள்ளும் பேரினவாத மமதை கொண்டோர், மறுக்கவோ மறைக்கவோ மறக்கவோ முடியாது.

இலங்கையில் உள்ள வற்றாத வளங்களுக்கு, வனப்புச் சேர்க்கும் வகையில் பல்வேறு இன, மத, மொழி, கலாசார, பாரம்பரிய பண்பாடுகளையும் நாம் கொண்டிருக்கின்றோம். ஆனால், வேறுபாடுகளையும் வித்தியாசங்களையும் ஆக்கபூர்வமாகக் கொண்டாடத் தவறிவிட்டோம். அதன் விளைவுதான் இந்த நெருக்கடி.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர், தீட்டப்பட்ட திட்டங்கள் இனவாதமாக இருந்ததுதான் ஆக்கபூர்வமான அபிவிருத்திகள் ஏற்படாததற்குக் காரணமாகும் என்பதை, இப்பொழுதாவது உணர வேண்டும்.

அது ஒருபுறமிருக்க, இலங்கைக்கு என்று தேசிய கொள்கைகள் ஏதுமில்லை. கொள்கை என்பது கட்சிக் கொள்கையாக மாத்திரம், ஆட்சிக்கு வருவோரால் அலங்கரிக்கப்பட்டு வந்துள்ளது. அதனால்தான் ஒரு சாராரால் தொடங்கப்பட்ட திட்டங்கள் மறுசாரார் ஆட்சிக்கு வரும்பொழுது, தொடர முடியாமல் இடைநிடுவில் முடங்கி விடுகின்றன.

இதனால், இலங்கை மக்களின் எத்தனை கோடி பணம் வீணாகியிருக்கிறது. கொள்ளை இலாபம் அடிக்கும் கொள்கைகளுக்காக, மக்களின் வரிப்பணம் வாரி இறைக்கப்படுகிறது. நாட்டில் பெரும்பாலான மக்கள் வறுமைக் கோட்டில் உள்ளவர்கள். இவர்களுக்காக முன்னர் 'ஜனசக்தி' என்றும் பின்னாள்களில் வந்த அரசால் 'சமுர்த்தி' என்றும் மாற்றப்பட்டது.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களில் பெரும்பாலானோர் தூரப்புறக் கிராமங்களில் வாழ்பவர்கள். இவர்களுக்கு நகரப்புற வாசனையும் சொகுசும் தேவையில்லை. அதனை அவர்கள் விரும்புவதுமில்லை. தங்களைச் சுற்றியுள்ள காடுகளில் கிடைக்கும் விறகைக் கொண்டு, அவர்களது சமையலை நிறைவு செய்து கொள்வார்கள்.

அந்த மக்களிடம் வற்புறுத்தி நீங்கள் தொடர்ந்து சமுர்த்திப் பயனாளிகளாக இருக்க வேண்டுமாயின் கட்டாயம் குறிப்பிட்ட ஒரு சமையல் எரிவாயு சிலிண்டரைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறியதற்கிணங்க வறிய மக்கள், சமையல் எரிவாயுவைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள். இது நாடு முழுக்க நடந்துள்ளது.

ஆனால், இன்று அந்த மக்களின் நிலை சமையல் எரிவாயு கிடைக்காததால் நடுத் தெருவில் விடப்பட்டுள்ளார்கள். இது என்ன கொள்கை? ஓர் அரச கொள்கையை மக்களிடம் அமலாக்கும்போது அது தங்குதிறனுள்ளதா, மக்களை வலுப்படுத்தக் கூடியதா என்று யோசிக்க வேண்டாமா?

நல்லாட்சி அரசாங்கத்தின் கடைசிக் கட்டத்தில், சஜித் பிரேமதாஸ வீடமைப்பு அமைச்சராக இருந்தார். அவர் நாடு முழுக்க வீடமைப்புத் திட்டங்களை உருவாக்கினார். மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் சுமார் 170 இற்கு மேற்பட்ட வீடமைப்புத் திட்டங்கள். அவை இன்று பூர்த்தி செய்யப்படாத நிலையில், 'இடி விழுந்த பனை மரம் போன்று' மொட்டையாக ஒன்றில் அடிமட்டத்தோடு அல்லது அதற்குக் கொஞ்சம் மேலெழும்பி நிற்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 3,200 வீடுகள் இவ்வாறு முழுமை பெறாத கட்டடத்தோடு, காடு மண்டிக் காணப்படுகின்றன.

இவ்வாறான கொள்கையற்ற நிலைமை குறித்து விளக்குகிறார் கொழும்பு பல்கலைக் கழக மனித உரிமைகள் நிலையத்தின் பிரதிப் பணிப்பாளரும் சட்டத்தரணியும் சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான எம்.ஏ.எம். ஹக்கீம். "தேசிய கொள்கைக்கான பெரியதொரு வெற்றிடம் இலங்கையில் காணப்படுகின்றது. இலங்கையில் எந்தவொரு விடயத்திற்கும் பரிபூரணமானதொரு தேசிய கொள்கை கிடையாது.

"நாட்டின் பொதுவான ஆவணம் அரசியலமைப்பு. அதன் 6வது அத்தியாயம் அரச கொள்கை வழிகாட்டிக் கோட்பாடுகள் பகுதியில் தேசிய கொள்கை பற்றி விவரிக்கிறது.

"அரசு கொள்கைகளை வகுத்து சட்டங்களை ஆக்கும்போது, செயற்பாடுகளை மேற்கொள்கின்றபோது பின்பற்ற வேண்டிய வழிமுறைகளைப் பற்றி அரசியலமைப்பு 6வது அத்தியாயம் விவரிக்கிறது. அந்த வழிமுறைகளை ஆட்சிக்கு வரும் எந்த அரசாங்கமும் பின்பற்ற வேண்டும். ஆனால், அது நடைமுறையில் இருப்பதில்லை.

"தங்களுடைய கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லப்பட்ட விசயங்கள், தங்களுடைய கட்சிக் கொள்கை, அடுத்த தேர்தலில் தாங்கள் எப்படி வெற்றி பெறப்போகின்றோம் என்ற குறிக்கோளுடன் செயற்படும் விதம், இதைத்தான் அரசியல் கட்சிகள் செய்து கொண்டிருக்கின்றன. அபிவிருத்தித் திட்டங்கள் முழுமை பெறாமல் இப்படி முடங்கிக் கிடப்பதற்கான காரணமும் இதுதான்.

"இந்த அபிவிருத்தித் திட்டங்களில் நேர்மையும் வெளிப்படைத் தன்மையும் இல்லாமல் மோசடிகள், இலஞ்சம், ஊழல் எல்லாம் இருப்பதால் இவைகள் எல்லாம் வெளிப்படுத்தப்படுவதில்லை.

"இவற்றை மறைப்பதற்காக திட்டமிட்ட அடிப்படையில் குழப்பங்களை உருவாக்கி, திசை திருப்புவதிலும் ஆட்சியிலுள்ளவர்கள் கவனம் செலுத்துவார்கள்.

"வீட்டுத் திட்டங்கள், நகர மயமாக்கல், பெருந்தெருக்கள் அமைத்தல், பாலங்கள் நிர்மாணித்தல், பாடசாலைக் கட்டடங்கள், பொது வசதிக் கட்டடங்கள் அமைத்தல், மைதானங்கள், சந்தைகள், பஸ் நிலையங்கள் அமைத்தல் இப்படி இன்னோரன்ன திட்டங்கள் காலத்துக்குக் காலம் அமலாக்கப்படுகின்றன. ஆனால், அந்தத் திட்டங்கள் ஆளும் அந்த அரசு காலத்தில் முடிவுறாமல் போனால், அடுத்த எதிரணி அரசாங்கம் வரும்போது திட்டங்கள் இடை நடுவில் கைவிடப்படுகின்றன.

"அரசு ஒரு திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்கின்றபோது, அந்தத் திட்டம் அத்திவாரத்திலிருந்து நாடா வெட்டித் திறக்கும் வரை அதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கும்.

"அப்படியாயின் எல்லா வேலைகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கும். திட்டம் இடை நடுவில் நிற்கின்றதென்றால் ஏதோ ஓர் இடத்தில் நிதிக் கையாடல் இடம்பெற்றிருக்கின்றது. இது அரச கொள்கையில், அதை அமல்படுத்துவதில் இருக்கும் பெரியதொரு மோசடி என்றுதான் கருத வேண்டியுள்ளது.

"இடையில் 'காசு இல்லை' என்று சொல்வது ஓர் ஏமாற்று. இது வீட்டுக்கு வீடு கடன் வாங்கிச் செய்யும் வேலை அல்ல. அது ஒரு பொறுப்புள்ள அரசு மேற்கொள்ளும் பணி.

"கட்சிகளுக்கு தனிப்பட்ட முறையில் கொள்கைகள் இருக்கலாம். ஆனால், எந்தக் கட்சியாக இருந்தாலும் தேசிய கொள்கையையே பின்பற்ற வேண்டும். ஆனால் ஒரு போதும் அவர்கள் தேசிய கொள்கைகளை வரைவதில்லை.

"இவ்வாறான நடவடிக்கைகள் இனிமேலும் தொடராமல் இருக்க, இப்போது நாட்டு மக்களின் கைகளில் இரண்டு வகையான துருப்புச் சீட்டுகள் இருக்கின்றன.

"ஒன்று, இந்த விடயங்கள் தொடர்பாக அரசு என்ன செய்திருக்கின்றது என்பது பற்றி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேள்வி எழுப்புதல். அடுத்தது, அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யலாம். இது அரசாங்கம் செயற்படுத்திய ஒரு திட்டம். இந்தத் திட்டத்தை நிறைவு செய்யாமல் வைத்திருப்பது அல்லது இடை நடுவில் கைவிட்டிருப்பதன் மூலம் எங்களது அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று பொதுமக்கள் அக்கறை வழக்காடலின் கீழ், உயர் நீதிமன்றத்தில் நிவாரணம் கேட்கலாம். இந்தியாவில் இப்படி நிறைய பெரிய வழக்குகள் இருக்கின்றன.

"ஆனால், இலங்கையில் பெரிய விசயங்களையெல்லாம் சின்ன வழக்குகளாகத் தாக்கல் செய்து முடித்துவிடும் கலாசாரம் இருக்கின்றது.

"இலங்கையில் ஆட்சிக்கு வருவோர் தமது அரசியல் கட்சி அடிப்படையில் கொள்கைகளை வகுக்கின்றனரே தவிர தேசியக் கொள்கைகளை வகுப்பதில்லை" என்றார்.

இலங்கை 1948இல் சுதந்திரம் பெற்ற பிறகு, ஆட்சி, மோசமான ஆட்சி, ஆட்சியற்ற நிலைமை ஆகிய மூன்றையும் எதிர்கொண்டு வந்துள்ளது. தற்போது ஆட்சி இல்லாத ஒரு முகமூடி ஆட்சி முறை நடக்கிறது. இது இப்போது இருப்பதை விட இன்னமும் பேரழிவை உருவாக்கத் தோதாய் அமைந்துவிடும். இலங்கை எதிர்கொண்டுள்ள மிக அழிவுகரமான நெருக்கடி இதுவாகும்.

## எமது வளங்களையும் மனித வலுவையும் பயன்படுத்தி

# வறுமையை வெல்ல வேண்டும்





சுப்பிரமணியம் பாஸ்கரன்

சிறுவர்களிடையே போசாக்கு குறைபாடு 20 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தை வைத்திய நிபுணர் டொக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளதாக அண்மைய செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது, கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் குழந்தைகளில் 15 தொடக்கம் 20 சதவீதமானவர்கள் போஷாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் தொடரும் தொழில் வாய்ப்பின்மை, பொருட்களுக்கான தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு என்பன மேலும் நிலைமையை மோசமாக்கி வருகின்றன.

வடக்கு மாகாணத்திலே ஒரு வயது தொடக்கம் ஐந்து வயதுக்குட்பட்ட சிறார்கள், அண்மைய நாள்களாக இந்தப் போசாக்கு குறைபாடுகளால் பாதிக்கப்பட்டு வருவதாக சுகாதார துறைசார் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில், கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் இதுபற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, ஒன்று தொடக்கம் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுடையே போசாக்கு குறைபாடு காணப்படுகிறது.

இதனால் பல்வேறு நோய் தாக்கங்கள் ஏற்படுகின்ற ஓர் அபாய நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வட மாகாணத்தில் உள்ள கிராமப்புறங்களில், தொழில் வாய்ப்பினை மற்றும் பொருட்களின் விலை ஏற்றம் குடும்பங்களின் பொருளாதார பின்னடைவு இவை எல்லாம் அந்த சிறுவர்கள் மீது தாக்கங்களைச் செலுத்துகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு கிராமத்திலே அதிகளவான சிறுவர்களின் போசாக்கு நிலை மிக மோசமாக காணணப்படுகின்றது. தொழில் வாய்ப்பின்மை காரணமாகவும் பொருட்களின் வெளியேற்றம் காரணமாகவும் அதிகளவான குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களில் உள்ள சிறுவர்கள், போசாக்கு குறைபாடுடைய சிறுவர்களாக காணப்படுகின்றனர். குறிப்பாக, கடல் உணவுகளினுடைய விலையேற்றம் காரணமாக, கடல் உணவுகளை எட்டிக் கூடப் பார்க்க முடியாத அளவிற்கு பலர் இன்றுள்ளனர்.

கிலோ கிராம் 600 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட கடல் உணவுகள் (மீன் வகைகள்), இன்று 2,000 ரூபாயைத் தாண்டியுள்ளன. அரிசி, பருப்பு, கடலை, உழுந்து, பயறு என்பனவும் போட்டியாக விலையேற்றம். இவற்றை ஒரு சாதாரண குடும்பம் வாங்க முடியாத நிலை காணப்படுகிறது.

இவ்வாறு போசாக்கு குறைபாடு என்பதை காரணம் காட்டிக்கொண்டு, ஒவ்வொருவரும் இருந்துவிட முடியாது. பொருட்களின் விலையேற்றம் என்பதற்கு அப்பால், வீட்டுத் தோட்ட செய்கைகளை மேற்கொள்வதற்கு மக்கள் ஆர்வம் காட்ட வேண்டும்.

சிறியசிறிய குளங்கள், குட்டைகளில் நன்னீர் மீன் வளர்ப்புகளை ஊக்குவித்து, அதன் மூலம் நன்னீர் மீன்களை கூட உணவாக உட்கொள்ளுகின்ற நிலைகளை உருவாக்க வேண்டும்.

ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக, குழந்தைகளின் போசாக்கு குறைபாடு அதிகரித்து வருவதனால், அவர்களின் ஊட்டச்சத்து குறித்து பெற்றோர்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.

வீட்டுத் தோட்டங்களை உருவாக்கி, குழந்தைகளுக்கு தோட்டத்தில் விளையும் கீரைகளை அதிகளவில் கொடுப்பது குறிப்பாக, முருங்கை இலையை தினமும் உணவில் சேர்த்து வருவதன் மூலம் ஏராளமான ஊட்டச் சத்துகளை பெற்றுக் கொள்ள கூடியதாக இருக்கும்.

உலகளாவிய ரீதியில் பார்க்கும் போது, அண்மையில் வெளியாகிய அறிக்கையொன்றில், உலகளாவிய பசி குறியீட்டில் இந்தியா மொத்தமுள்ள 116 நாடுகளில் 101ஆவது இடத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டிந்தது.

பசி தீவிரமானது என அடையாளம் காணப்பட்ட 31 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். 2020ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட உலகளாவிய பசி குறியீட்டில் 107 நாடுகளில் இந்தியா 94ஆவது இடத்திலிருந்தது.

பப்புவா நியூ கினியா (102), ஆப்கானிஸ்தான் (103), நைஜீரியா (103), காங்கோ (105), மொசாம்பிக் (106), சியரா லியோன் (106), திமோர்-லெஸ்டே (108), ஹெய்தி (109), லைபீரியா (110) ), மடகாஸ்கர் (111), காங்கோ ஜனநாயக குடியரசு (112), சாட் (113), யமன் (115) மற்றும் சோமாலியா (116) நாடுகளாகும்.

2030ஆம் ஆண்டுக்குள் பசியற்ற சமூகம் உருவாக வேண்டும் என்ற இலக்கை நோக்கி, உலகம் முன்னேற வேண்டியுள்ளது. போசாக்கு குறைபாடு, குழந்தைகள் வீணாக்குதல், குழந்தைகள் வளர்ச்சி குறைபாடு, குழந்தைகள் இறப்பு விகிதம் உள்ளிட்டவற்றை வைத்துப் பசி குறியீடு உருவாக்கப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.

உலக பரப்பில் இவ்வாறு வறுமை கானப்படுகின்றது. ஆனாலும், நாம் எமது வளங்களையும் மனித வலுவையும் பயன்படுத்தி வறுமையை வெற்றி கொள்ள வேண்டும்.





# ஜனநாயக உரிமையை வன்முறை அம்புகள் சீண்டலாம்; கவனம்!

உலகின் பார்வையே இலங்கையின் மீது குவிந்து கிடக்கிறது. அந்தளவுக்கு நாட்டின் நிலைமை மோசமாகிவிட்டது. அவற்றையெல்லாம் நன்கு புரிந்துகொண்டுதான் வெளிநாடொன்றிலிருந்து சுற்றுலாப் பயணியாக வந்த ஒரு குடும்பத்தினர், சைக்கிளுடன் வந்துவிட்டனர்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் நெருக்கடிக்குத் தீர்வை நிரந்தரமான தீர்வை முன்வைக்காது, பொய்களை அரசாங்கம் கூறிவருவதால் மக்கள் கொதித்தெழுந்துள்ளனர். ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்புப் பேரணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. கடுமையான அழுத்தம் கொடுக்கும் வகையில் இன்று (09) ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

கொழும்பு மட்டுமன்றி நாடே அரைவாசிக்கு மேல் முடங்கிக்கிடக்கிறது. இன்றையதினம் நாடு முழுமையாகவே முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கொழும்பில் பாரிய பேரணிகளை முன்னெடுப்பதற்காக பொதுவெளியில் பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் பல பாகங்களிலிருந்து கொழும்புக்கு பேரணிகள் வந்துகொண்டிருக்கின்றன.

இந்நிலையில், கொழும்பில் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுவதை தடுக்கும் வகையில் பொலிஸாரால் நீதிமன்றங்களில் முன்வைத்த மனுக்கள் யாவுமே தள்ளுப்படி செய்யப்பட்டுள்ளன. அதன்பின்னர் அறிவிப்பொன்றை விடுத்த பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன "ஜனநாயக ரீதியில் போராட்டங்களை நடத்த அனுமதிக்கப்படும்" எனக் கூறியிருந்தார்.

ஜனநாயக ரீதியில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களை குழப்புவதற்கும் சதித்திட்டங்களைத் தீட்டலாம். மிரிஹானையில் உள்ள ஜனாதிபதியின் தனிப்பட்ட வாசஸ்தலத்துக்கு முன்பாக நடத்தப்பட்ட போராட்டத்தின் போது பஸ் கொளுத்தப்பட்டதுடன், தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

'மைனா கோ கம' அதற்குப்பின்னர் 'கோட்டா கோ கம' மீதான தாக்குதல்கள் திட்டமிட்டே முன்னெடுக்கப்பட்டன. இதனால் கறைபடிந்த வரலாறே பதிவானது. அவ்வாறான சதித்திட்டங்களும் தீட்டப்பட்டு ஜனநாயக போராட்டத்தின் மீது வன்முறை அம்புகள் ஏவப்படலாம். ஆகையால் விழிப்பாகவே இருக்கவேண்டும்.

அரசியல் கட்சிகள், பொது அமைப்புகளைச் சேர்ந்தவர்களால் இணைந்து முன்னெடுக்கப்படும் அரசாங்கத்துக்கு எதிரான இன்றைய போராட்டத்தில், ஜனநாயகத்தை மீறும் வகையிலான கசப்பான சம்பவங்கள் இடம்பெற்றுவிடக்கூடாது என்பதில் ஒவ்வொருவரும் கவனமாக இருக்கவேண்டும். அதேபோல, அரச, பொதுச் சொத்துகளுக்கும் சேதம் விளைவித்துவிடக்கூடாது.

இந்நிலையில், கொழும்பின் பாதுகாப்பு பன்மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. முக்கிய இடங்களுக்குள் மக்கள் நுழைந்துவிடாத வகையில், இரும்புக் கம்பிகளைக் கொண்டு, வேலிகள் பின்னப்பட்டுள்ளன. பொது, அரச சொத்துக்களுக்கு சேதங்கள் ஏற்பட்டுவிடாத வகையில், பாதுகாப்பு வழங்கவேண்டிய பொறுப்பு பாதுகாப்பு தரப்பினருக்கு உரியது.

எனினும், ஜனநாயக போராட்டத்தை இரும்புக் கரங்களைக் கொண்டு நசுக்குவதற்கும் முயற்சிக்கக்கூடாது. குழப்பங்களை விளைவிப்பதற்கு முயற்சிப்போர் குறித்து அவதானத்துடன் இருக்கவேண்டும் என்பதுடன், ஜனநாயக போராட்டத்தை சீண்டிப்பார்க்கவும் எத்தனிக்கக்கூடாதென வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

மனிதன் எதிர்பாராத மாற்றங்கள் என்றும் நடந்தபடிதான் இருக்கும். சர்வாதிகாரிகளின் பதவி பறிபோனால் அவர்களை எவர்தான் மதிக்கப்போகிறார்கள். நித்தியமானது உலகு எனக் கனாக்காணும் மக்கள், கண் முன்னே கரையும் மாற்றங்களை நம்பாமல் இருக்க முடியுமா?

மமதை கொண்டவன் புத்தியை பறிகொடுக்கிறான். அதுவே நிலையானது என தனது கர்வங்களை விஸ்தரித்த வண்ணம் இயங்குகின்றான்.

தோல்விகள் தொடரும்போது, தங்களின் அறியாமையைத் தேடுகின்றார்கள். மக்களை ஒரே நோக்கில் பேதமற நோக்குபவனே உண்மையான மனிதன். பேதம்காட்டுபவன் எவர் உதவிகளும் இன்றி ஏதிலியாகின்றான்.

எல்லோருடனும் நேயத்துடன் வாழ்வதே தங்களின் பெருமைக்கு ஊறுவிளைவிக்கும் என்று நம்புகின்றார்கள். வீண் கௌரவங்கள் வளர்ச்சிக்குத் தடை. அரவணைப்பு உலகுக்கு ஏற்றம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இயலாமையின் வெளிப்பாடுகள்

**லக்ஸ்மன்**

மக்கள் அத்தியாவசியப் பொருட்களுக்காகத் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திண்டாட்டம் உணவுக்கு மாத்திரமல்ல, அவர்களுக்கான மருந்துப் பொருட்கள், எரிபொருள்கள், எரிவாயு என்ற பெரிய பட்டியலையுடையது. எரிபொருளுக்காக காத்திருப்பவர்கள் மரணிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

எரிபொருளுக்காகக் காத்திருப்பவர்களுக்கு இடையிலான மோதலிலும் மரணங்கள் சம்பவிக்கின்றன. இந்நிலையிலும் பேரினவாத அடிப்படைவாதிகள் மக்களைப் பிழையான வழிகளில் திசைதிருப்பவே முயல்கின்றனர். அதற்கான உதாரணங்களில் ஒன்றுதான் ஜுலை 05 மற்றும் 06ஆம் திகதிகளில் விடுதலைப் புலிகள் அமைப்பினால் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறலாம் எனும் கதை கட்டலாகும். இது அப்பட்டமானதோர் இயலாமையின் வெளிப்பாடாகும். 'கோட்டா கோ கம' தொடங்கியகாலத்தில் தாக்குதல் நடக்கலாம் என்ற அறிவிப்பொன்றும் பரப்பப்பட்டிருந்தது, அதன் தொடர்ச்சியே இதுவாகும்.

ஒன்றை நடத்தி முடிப்பதற்கு பல வழிகள் கையாளப்படுகின்றன. இலங்கையின் தற்போதைய நிலையில் அனைத்து வழிகளும் முயலப்படுகிறது. ஆனாலும் அரசாங்கத்தால் சாதாரணமாக எரிபொருள் பிரச்சினையைக் கூட சமாளிக்க முடியவில்லை என்பதே உண்மை.

போராட்டங்கள், சத்தியாக்கிரகங்கள், புலம்பல்கள், நீண்ட வரிசைகள், நாட்டைவிட்டுத் தப்பிச்செல்லும் முயற்சிகள், அது தொடர்பான கைதுகள், திருப்பியனுப்பல்கள் என நடைபெறுகின்றவை அனைத்துமே மக்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வைத் தேடும் முயற்சிகளே. இவற்றுக்கான தீர்வுகளைக் காண்பதென்பது எல்லோராலும் முடியாத காரியம். என்றாலும் முயற்சிகள் மாத்திரம் கைவிடப்படவில்லை.

இன்றையதினம் 9ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தை நோக்கி நகர்வது, சுற்றி வளைப்பது, மற்றும் நாடெங்கும் தமது ஊர்களில் தெருகளுக்கு வந்து அமைதியான முறையில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதும் கூட இதே நோக்கத்தினைக் கொண்டதே.

எதிர்க்கட்சிகள், காலிமுக போராளிகள், சிவில் சமூகத்தினர் இணைந்து முன்னெடுக்கின்ற இந்த முயற்சிக்குத் தொடர்ச்சியான ஆதரவுகள் வெளிப்படுத்தப்பட்டன. 'கோட்டா கோ கம' ஆரம்பித்ததிலிருந்து தொடங்கிய ஊர் ஊராக போராட்டம் நடத்தும் செயற்பாடுகளின் உச்சமாக, இது அமையவேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இணக்கப்பாடும் ஒற்றுமையும் புரிதலும் எந்த ஒரு விடயத்தில் இல்லையோ, அந்த விடயத்தில் நம்மால் வெற்றியை அடைந்துவிடமுடியாது. ஒவ்வொருவருக்கும் தம்முடைய இயலாமை புலப்படுவது ஒவ்வொரு முறையிலாகும். சிலருக்குக் கோபம் ஏற்படலாம். சிலர் அமைதியாகலாம். சிலர் மகிழ்ச்சியாகப் பாவனை செய்யலாம். பிரச்சினைகளைச் சமாளிக்க முயலலாம். இருந்தாலும் இலங்கையின் ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் தன்னுடைய இயலாமையை அடக்குமுறைகள் மூலம் வெளிப்படுத்த முனைகிறாரே தவிர, நாட்டு மக்களின் நிம்மதி, பிரச்சினைகளின் குறைப்புகளுக்கு முயலவில்லை. அதனாலேயே மக்கள் தங்களுடைய இயலாமையை போராட்டங்கள் மூலமாகக் காண்பிக்க முயல்கின்றனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் போராட்டங்களுக்கும் வன்முறைகளுக்கும் பஞ்சமில்லாத நாடேயாகும்.

இந்த இடத்தில்தான் இதுவரையில் எதிர்த்தரப்பினரிடமுள்ள தங்களில் ஒருவரை முதன்மைப்படுத்தாத தன்மையைச் சுட்டிக்காட்டியாக வேண்டும்.

நாட்டில் இந்தப் பொருளாதார நெருக்கடிகள் ஆரம்பித்ததிலிருந்து எதிர்க்கட்சிகள் ஐக்கிய மக்கள் சக்தி ஒரு புறமும், மக்கள் விடுதலை முன்னணி ஒருபுறமுமே இயங்கி வருகின்றன. மக்களுக்காக ஒன்றை அடைந்து கொள்ள முயல்கின்றோம் என்றால், இதிலும் அரசியல் போதங்கள், அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் எதற்காக என்பதே இந்த இடத்தில் கேள்வி.

மக்களின் நன்மைக்கான ஒன்றில் எதற்காக அரசியல் என்பதுதான் அந்தக் கேள்வி. நாடே ஆபத்தில் இருக்கும் போதும் கூட அரசியலைச் செய்ய முனைவதானது பெரும் அபத்தமாகும்.

முள்ளை முள்ளாலேயே எடுக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை எட்டிவிட்ட அரசுக்கும் ஜனாதிபதிக்கும் எதிரான போராட்டம் இன்னமும் ஒருமிப்பை அடையவில்லை என்றே சொல்ல வேண்டும். போராட்டங்கள் நடைபெறுகின்றன. ஆனால் யார் நாட்டைப் பொறுப்பேற்பது என்பதும். யாரால் இலங்கையின் பிரச்சினைக்கான அற்புதத்தை நிகழ்த்திக் காட்டமுடியும் என்பதும் புரியாத புதிராகவே இருக்கிறது.

தமிழர்களின் அரசியல் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் விடயமாக அவர்களுக்காக சுதந்திரமான வாழ்க்கைக்கான அரசியல் தீர்வே இருக்கும். ஆனால் ஜுலைக் கலவரமானது பெரும் கரும்புள்ளியே. இந்த மாதமானது தமிழ் மக்களுக்காக கரும்புள்ளியாக இல்லாமல் முழு நாட்டுக்கும் கரும் புள்ளியாக மாற்றம் பெறும் என்றே எண்ணத் தோன்றுகிறது. அவ்வாறான ரண களநிலைமை தென்பகுதிகளிலும், சிங்கள மக்கள் வாழும் ஏனைய பிரதேசங்களிலும் ஏற்பட்டு வருகிறது. இந்த நிலைமை நாட்டுக்கே ஆபத்தானதாகும்.

சிவில் செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகள், இளைஞர்கள் என்றிருந்த போராட்டங்கள் சாதாரண மக்களையும் இணைத்து, இப்போது பௌத்த பீடங்களின் பிக்குகள் சத்தியாக்கிரகத்தினை நடத்துமளவிற்கு வந்துவிட்டது.

காலிமுகத்திடலில் 1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் என்ற சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வந்ததற்கெதிராக மூத்த தமிழ்த் தலைவர்கள் மொழியுரிமைக்காக போராடியபோது தலைகள் உடைக்கப்பட்டன.

இலங்கை இராணுவப்படைகள் பார்த்திருக்கும் போது, காடையர்களை ஏவிவிட்டு அச்சுறுத்தப்பட்டார்கள். அவர்கள் பாராளுமன்றம் சென்றபோது அங்கே எள்ளி நடையாடப்பட்டனர். 1983ல் ஜுலைக் கலவரத்தின் மூலம் தமிழர்கள் பதம் பார்க்கப்பட்டனர். பின்னர் நடைபெற்ற யுத்த காலத்தில் நிகழ்ந்த கொடுமைகள் எண்ணிலடங்காதவைகளாகும்.

ஆனால், இன்று காலிமுகத்திடலில் இந்த நாட்டின் நடுத்தர வர்க்கத்தினர், சாதாரண மக்கள் அன்றாடத் தேவைகளுக்காக போராடிக்கொண்டிருக்கையில் அவர்கள் பந்தாடப்படுகின்றனர். ஜனாதிபதியை வெளியேற்றப் போராட்டம் நடத்துபவர்கள் மீது கண்ணீர்ப்புகைப்பிரயோகம், நீர்த்தாரைப்பிரயோகம், தடியடிகள், கைதுகள் நடைபெறுகின்றன.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வன்முறைகள் பாதுகாப்புத் தரப்பினரால் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன. ஒரு இராணுவ வீரர் பொது மகனை காலால் உதைத்துவிட்டு 'உதைத்தேன் படவில்லை' என்கிறார். இந்த வகையான முன்செல்லலை நாம் எவ்வாறு கையாள்வது என்பது புரியாத புதிராகவே இருக்கிறது.

அந்தவகையில் தமிழர்களின் குரலானது, இந்த ராஜபக்ஷர்கள் இந்த நாட்டினை எத்தனை தடவைகள் ஆண்டிருக்கிறார்கள். இந்த ராஜபக்ஷ சகோதரர்களை தமிழ், தமிழ்பேசும் மக்களாகிய நாங்கள் கடந்த காலங்களில் வேண்டாமென்று கூறியிக்கின்றோம். 2005ஆம் அண்டு மகிந்த ராஜபக்ஷவை நாங்கள் வேண்டாமென்று கூறினோம். அவருக்கெதிராகப் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தோம். சில இடங்களில் நாங்கள் வாக்களிக்காமலும் விட்டிருந்தோம்.

2010இல் மகிந்த ராஜபக்ஷவை வெறுத்தது மாத்திரமல்லாமல் மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் 2009இல் எமது போரை முடிவுக்குக் கொண்டுவந்த சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் அளவிற்கு நாங்கள் ராஜபக்ஷ சகோதரர்களை வெறுத்திருந்தோம்.

அதே போன்று 2015இலும் நாங்கள் அவர்களை வெறுத்திருந்தோம். 2019இல் இந்த கோட்டபாய ராஜபக்ஷவை நாங்கள் வேண்டாமென்றே கூறியிருந்தோம். முடிவு சரியானாலும், பலனை அனுபவிப்பது நாங்களாகவும்தான் இருக்கிறது. இதில் யார் யாருடைய இயலாமையைக் காண்பிப்பது?

நாட்டு மக்களுக்கிருக்கின்ற நெருக்கடிகளுக்குள், சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுக்கள் வெற்றிகரமாகத் தொடர்கின்றன. பாராளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிராக எதிர்ப்புக் கோசம், சபை ஒத்திவைப்பு, பிரதமர் ரணில் பதவி விலகவேண்டும். ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசிக்க முனைந்த ஹிருணிகா கைது, ஜனாதிபதி பதவி விலகவேண்டும். ஆறு மாதங்களுக்குள் நாடு வழமைக்குத் திரும்பும் இவையெல்லாம் சிறு செய்திகளே.

சிங்கள மக்கள் தங்களின் ராஜாவாகப் பாவனை செய்தே கோட்டபாயவை ஜனாதிபதியாக்கி, படைபலத்துக்காக சிறிலங்கா பொது ஜன பெரமுன ஆட்சியை ஏற்படுத்தினார்கள். அதனால் ஏற்பட்ட இறுமாப்பு அவர்களை நினைத்த போக்கில் ஆடவைத்தது.

ஆனால், கொவிட் பரவல் அது எதனையும் நிகழ்த்த இடம் கொடுக்கவில்லை. இப்போது மக்களைத் தாக்கியிருக்கிறது. உலகத்தில் மிகவும் குறுகிய காலத்தில் போற்றப்பட்ட தலைவராகவும், மிக விரைவிலேயே இகழப்பட்ட தலைவராகவும் மாறிவிட்ட கோட்டபாய ராஜபக்ஷ இதுவரையில் நாட்டு மக்களுக்காக தன் பதவியைக்கூடத் துறக்கமுடியாதவராக இருப்பதையே அவரால் செய்ய முடிகிறது.

கோட்டபாய ராஜபக்ஷவுக்கு எதிராக நீண்ட போராட்டங்கள், நம்பிக்கையில்லாத் தீர்மான முயற்சி, குற்றப்பிரேரணை முயற்சி என நடைபெற்றும் வாக்களித்த மக்களால் எதனையும் சாதிக்க முடியவில்லை. அவர்கள் ஓர் இயலாதவர்களாகவே ஆகிவிட்டார்கள்.

உலகளவில் தமிழ் மக்களால் போர்க் குற்றவாளியாகப் பார்க்கப்படும் கோட்டபாய ராஜபக்ஷ, இலங்கையில் ஒரு பொருளாதாரக் குற்றவாளி. எல்லா வகைகளிலும் இயலாதவராக மாறிவிட்ட அவர் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் ஓர் ஆயுதமாகவே இந்த ஜனாதிபதி பதவியை வைத்துக் கொண்டிருக்கிறார்.

அனைத்தும் பிடுங்கப்பட்டவராகத் தன்னை மாற்ற அவருக்கு மனமில்லைபோலும். இருந்தாலும், இவ்வளவும் நடந்து முடிந்த பின்னும், இயலாமையை ஏற்றுக் கொள்ளாமல் தன்னுடைய பதவிக்காலத்தில் நாட்டை மீட்டெடுப்பேன் என்கின்ற நப்பாசையை நாம் பாராட்டத்தான் வேண்டும்.

## கடிதங்கள்

### திருமுருகண்டி பிள்ளையார் கோவில் சூழலில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்கள்

நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி, எல்லோரையும் வெகுவாக பாதித்திருக்கின்றது. ஏராளமான குடும்பங்கள் அடுத்த வேளை உணவிற்கு அல்லற்படும் அவலநிலை தொடர்கின்றது.

ஏ-09 வீதியில் அமைந்துள்ள திருமுருகண்டி பிள்ளையார் கோவில் சூழலில், அன்றாடம் வாழ்வாதார தொழில் மேற்கொண்டு வாழும் பலரது வாழ்வும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, ஏ-09 வீதியூடான போக்குவரத்துகள் பாரியளவில் வீழ்ச்சி கண்டுள்ளன. இதனால் தமது வாழ்வாதாரம் முற்றாகவே பாதிக்கப்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


முன்பு களைகட்டி காணப்பட்ட இப்பிரதேசம் இன்று மக்கள் நடமாட்டம் அற்ற ஒரு பிரதேசமாக காணப்படுகின்றது. அதாவது, வடக்கிலிருந்து தெற்கும் தெற்கிலிருந்து வடக்கிற்கும் பயணிக்கும் பயணிகளில் ஒவ்வொருவரும் முருகண்டி ஆலயத்தை தரிசிக்காது அல்லது அங்கே இளைப்பாறாது சென்றதாக வரலாறுகள் இல்லை.

ஆனால், இன்று வெறிச்சோடி காணப்படுகின்ற பிரதேசமாக காணப்படுகிறது. இதனால் இந்தப் பிரதேசத்தில் தங்களுடைய வாழ்வாதார தொழிலாக வியாபாரத்தை மேற்கொண்டு வாழ்ந்து வரும் ஏராளமான குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு இருப்பதுடன் அவர்களைச் சார்ந்து வாழுகின்ற குடும்பங்களும் தங்களுடைய வருமானங்களை இழந்த நிலையில் காணப்படுகின்றன.

யது பாஸ்கரன்







## மஸ்கெலியா சென் ஜோசப்ஸ் தேசிய கல்லூரியின்

# 82 ஆவது கல்லூரி தினம்

செ.தி.பெருமாள்

perumaltperumal388@gmail.com

மஸ்கெலியா சென் ஜோசப்ஸ் கல்லூரியின் (தேசிய பாடசாலை) 82 ஆவது கல்லூரி தினம் 08 ஜுலை 2022 மிகவும் எளிமையான முறையில் அனுஷ்டிக்கப்பட்டது.

ஈழத் திருநாட்டின் மத்திய மலைநாட்டில் சர்வ மதத்தினராலும் போற்றப்பட்டு துதிக்கப்படும் மலை தான் சிவனொளி பாதமலை.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மலையின் கண்ணே அமைந்திருப்பதுவும், மௌசாக்கலை நீர்த்தேக்கத்தினை அரணாகத் தன்னகத்தே கொண்டிருப்பதுவும் தான் இந்தக் கல்லூரியின் பெருமையாகும்.

உண்மை, அழகு, செம்மை ஆகிய மூன்றையுமே அறிஞரது உலகம் நாடி நிற்கும். இயற்றமிழ் உண்மையினையும் இசைத்தமிழ் அழகினையும் நாடகத் தமிழ் செம்மையினையும் உயர்வாக வெளிப்படுத்தும் உன்னத நாதங்கள்.

இந்த முத்தமிழையும் வளர்த்தெடுப்பதில் கல்லூரி முதன்மை பெற்றுத் திகழ்வது எம் அனைவரும் செய்த பாக்கியமே.

மஸ்கெலியா நகரின் நுழைவாயிலுக்கு அருகாமையில் மிகவும் ரம்மியமான சூழலின் மத்தியில் காணப்படுவது தான் சென் ஜோசப்ஸ் கல்லூரி (தேசிய பாடசாலை).

அர்ச். சூசையப்பர் உரோமன் கத்தோலிக்கப் பாடசாலை என்ற பெயருடன் 08.07.1940 ஆம் ஆண்டு சுமார் 80 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த கல்லூரி, காலப்போக்கில் வளர்ந்து, ஓங்கி, விருட்சமாக வளர்ந்து, வளர்த்தவர்களுக்கு நன்றி பாராட்டும் நல்லறிவாளர்களது முயற்சியால் சென் ஜோசப் தமிழ் மகாவித்தியாலயமாக மாறி, பின்னர் சென் ஜோசப் கல்லூரி (தேசிய பாடசாலை) என்ற பெயருடன் மாட்சிமிக்கதாக விளங்குகின்றது.

இலங்கையின் பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பதற்காக தென்னிந்தியாவிலிருந்து பிரித்தானியரால் கொண்டு வரப்பட்ட தமிழ் மக்கள், மத்திய மலை நாட்டில் குடியமர்த்தப்பட்டனர்.

அவர்கள் காடுகளை கழனிகளாக்கினர். கல்வி அறிவற்ற, சரியான வழி நடத்தல் இன்றி, அறியாமையில் மூழ்கி, மேய்ப்போனற்ற ஆடுகளைப் போல விளங்கிய இந்த மக்களை வழி நடத்தவென, அன்றைய கிறிஸ்தவப் பாதிரியார் ஒருவரால் இந்தப் பாடசாலை ஆரம்ப காலகட்டத்தில் தேவாலயத்தினுள் ஆரம்பிக்கப்பட்டது.

வரலாற்று ரீதியிலான வெளிப்பாடுகளுடன் முதன் முதலாக இரண்டு ஆசிரியர்களுடனும், எண்பது மாணவர்களுடனும், இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது .இப்பாடசாலையின் முதலாவது தலைமை ஆசானாக அமர்ந்து , அதனது வளர்ச்சிக்கு உதவியவர் டி. எம். எட்வேர்ட்ஸ் ஆவார்.

அன்றைய அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவச மதிய உணவுத் திட்டமானது முதன் முதலாக இப்பாடசாலையில் 12. 04. 1944 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

காலவோட்டத்தில் பல்வேறுபட்ட அதிபர்களையும் ஆசிரியர் பெருமக்களையும் தன்னகத்தேக் கொண்டு வளர்ந்த இந்தப் பாடசாலை 1968 ஆம் ஆண்டு மௌசாக்கல நீர்த்தேக்க உருவாக்கத்தின் காரணமாக புதிய மஸ்கெலிய நகருக்கு மாற்றப்பட்டது.

புதியதொரு பாடசாலை இல்லாத நிலையில் அப்போதைய சமனெலிய சிங்கள மகா வித்தியாலயத்தில் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டது.

இதற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் சமனெலிய சிங்கள மகா வித்தியாலயமானது வேறுறோர் இடத்துக்கு மாற்றப்பட்டதன் காரணமாக தற்போது இருக்கும் சென் ஜோசப்ஸ் கல்லூரிக்கு அப்போதைய கட்டடங்களும் அதனுடன் இணைந்த நிலப்பரப்பும் உரித்தானது.

இந்தப் பாடசாலையின் வளர்ச்சியைக் குறிப்பிடும் வகையில் 1973 ஆம் ஆண்டு மாணவர்களது கல்வி வளர்ச்சியில் ஒரு புதிய அத்தியாயம் உருவாகியது என்று கூறினால் அது மிகையாகாது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தலைசிறந்த பாடசாலை ஒன்றிலிருந்து இடமாற்றம் பெற்று வந்த சி . கணபதிப்பிள்ளை என்ற அதிபரின் வருகையானது இப்பாடசாலை வரலாற்றில் ஒரு பொற்காலம் எனக் கூட வர்ணிக்கலாம்.

இன்று இப்பாடசாலையைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களின் உருவாக்கத்திற்கு வித்திட்டவரே இவர் தான் என்றால் அதில் தப்பில்லை.

காடாகவிருந்த இதன் அயல் நிலங்களைப் பாரிய புல்டோசர் இயந்திரங்களைக் கொண்டும், சிரமதான அடிப்படையிலும், தளம் வெட்ட உறுதுணையாக இருந்தவர்.

எம்மவர்களுக்கு வாசிக சாலை மணம் கூடத் தெரியாத காலகட்டமது. முதன் முதலாக வாசிக சாலை அமைத்து, அதற்குரிய புத்தகங்களையும் பெற்று, சிறு அறையொன்றினுள் வாசிப்புப் பகுதி, இரவல் பகுதி ஆகிய இரண்டையும், கட்டடப் பற்றாக்குறை காலக்கட்டத்தின் போதும் திறம்பட நடத்த வழிசமைத்தவர்.

வாசிக சாலையின் மகத்துவம் தெரிந்த அதிபர் என்ற காரணத்தால் எங்கெல்லாம் நூல்களை திரட்ட முடியுமோ அங்கெல்லாம் தேடித் திரட்டி வாசிக சாலையை ஒரு கலைக்கூடமாக மாற்றியவர்.

அன்றைய வாசிப்புப் பயிற்சி தான் பிற்காலங்களில் எங்களைப் போன்றவர்களது வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

முதன் முதலாக பாடசாலைக்கு மின் இணைப்பு, தண்ணீர் குழாய் போன்றவற்றை அமைத்ததோடு, விளையாட்டையே கண்டிராத எம்மவருக்கு விளையாட்டுப் போட்டிகளை நடத்தியதோடு, பெருமளவு உபகரணங்களையும் தனக்குத் தெரிந்தவர்கள் மூலம் கொள்வனவு செய்தவர்.

உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கிரிக்கெட், கெரம், தாம், செஸ் போன்ற பல்வேறுபட்ட உபகரணங்கள் இருந்ததோடு மாணவர்கள் அனைவரும் கட்டாயமாக இத்துறைகளில் பங்கு பெற வேண்டும் எனவும் ஊக்குவித்தவர்.

ஆங்கில வாசனையே கண்டிராத எம்மவருக்கு ‘English Club’ என்ற அமைப்பொன்றை அமைத்தவர். கடுங் குளிராக இருந்தாலும் அந்தக் குளிரையும் பொருட்படுத்தாது, அதிகாலை நான்கு மணிக்கு நகரில் உள்ள பின்தங்கிய மாணவர்கள் அவரிடம் இலவச ஆங்கிலக் கல்வி கற்க சென்றதனை எண்ணிப் பார்க்கின்றேன்.

ஒவ்வொரு மாதமும் கல்வி ரீதியாக, பேச்சு, நாடகம், பொது அறிவு, மனனப் போட்டிகள், திருக்குறள் போட்டிகள், கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டன.

வெற்றியீட்டியவர்களுக்கு கல்லூரித் தினத்தன்று சான்றிதழ்களும் பரிசுகளாக நல்லறிஞர்களது புத்தகங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. இவைகள், இன்றும் என் மனக்கண் முன் அசைப் போடுகின்றது. மனையியல் கூடம், தையற் பயிற்சி, மாணவர் மன்றங்கள், இந்து சமய மன்றங்கள், மாணவர் தலைவர் முறைமை, சாரணிய அமைப்பு ஆகியவை இப்பாடசாலையில் உருவாக முன்னோடியாக திகழ்ந்தவரும் இவர்தான்.

பின்னேரம் 4 மணி வரை இலவச வகுப்புகள் நடத்தப்பட்டு, அதன் பின்னர் கட்டாயம் விளையாட்டு பயிற்சியையும் மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

இவருக்கு பின்னர் வந்த அதிபர்கள் தங்களது பணிகளை மிகச் சிறப்புடனும், முழு முயற்சியுடனும் பாடசாலை வளர்ச்சிக்காக தங்களை அர்ப்பணித்து சேவையாற்றினர்.

அக்காலத்தில் எமக்குக் கற்பித்த ஆசிரியர்கள் எம்மைக் கண்டிக்கும் போது கூட, நாகரிகமான சொற்பிரயோகங்களையே பயன்படுத்தினர். இந்த வகையில் கூட நாம் சிறந்த சொல்லாட்சியைக் கற்கக் கூடியதாக இருந்தது.

இவ்வாறு பல்வேறுப்பட்ட பரிணாம வளர்ச்சிக் கூடாக வளர்த்தெடுக்கப்பட்ட எமது கல்லூரியானது இன்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களையும் அதுபோல ஆரம்பப் பிரிவுக்கெனவொரு தனிப் பாடசாலையும் அமைக்கப்பட்டு இருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

இப்பாடசாலை இன்று பல்வேறு மட்டங்களிலும், பல்வேறு துறைகளிலும், மாவட்ட, மாகாண, நாடளாவிய ரீதியில் முன்னேறி வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இப்பாடசாலையின் வளர்ச்சியில் இன்று உயர்தர வகுப்புகள் கலை, வர்த்தக, விஞ்ஞானப் பிரிவுகளை உள்ளடக்கியதாக காணப்படுவதானது இந்த பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் ஒரு மைல் கல்லாகும்.

கல்வித் துறையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று, இப்பாடசாலை முன்னோக்கிச் செல்வதுவும் பாராட்டப்படக்கூடிய ஓர் அம்சமாகும்.

ஆடம்பரமற்ற, எளிமையான இலட்சிய நோக்கில் இருந்து சிறிதும் பிறழாமல், உறுதி கொண்டு மக்களின் நல்வாழ்வுக்கு தெய்வ பக்தி, அன்பு, அறிவு, பண்பு, ஒழுக்கம் முதலிய நற்சீலங்களைப் பரப்ப, இக்கல்லூரி ஆற்றிய பணி மகத்தானது என்பதில் சந்தேகம் இல்லை.

இந்நிலைத் தொடர்ந்து நீடித்து, தகுதி வாய்ந்த நல் ஆசான்களின் சேவையைப் பெற்று நாட்டிற்கு உகந்த உத்தம சீலர்களை, பண்பாளர்களை, கல்விமான்களை உருவாக்க வேண்டும்.

இப்பாடசாலையில் கல்வி கற்றவர்கள் இன்று வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, கணக்காய்வாளர்களாக, அதிபர்களாக, ஆசிரியர்களாக, சமூக சேவையாளர்களாக, பேராசிரியர்களாக , சட்டத்தரணிகளாக, பட்டதாரிகளாக, பேச்சாளர்களாக, தொழிலதிபர்களாக, உருவெடுத்ததற்கு இப்பாடசாலையே காரணமாகும்.

இந்த வகையில் இப்பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவன் என்ற வகையில், பின்னாளில் இப்பாடசாலையிலேயே ஆசிரியராகவும் பின்னர் மாவட்ட, மாகாண ரீதியிலான ஆசிரிய ஆலோசகராகவும், பத்திரிகை நிருபராகவும், விரிவுரையாளராகவும், இராஜதந்திரியாகவும் கடமையாற்றுவதற்கு வழி சமைத்த, அதற்காக ஊக்குவித்த சகல ஆசிரியர்களும் அதிபர்களும் நன்றியுடன் நினைவு கூரப்படவேண்டியவர்கள்.

இவை எல்லாவற்றிற்கும் அடித்தளமிட்டது எமது பாடசாலை தான் என்பதனை எண்ணிப் பார்க்கின்ற பொழுது இன்றும் அது பெருமையைத் தரக்கூடியதாகவே காணப்படுகின்றது.

இவ்வாறு பலரையும் வளர்த்தெடுத்த இந்தப் பாடசாலையின் 82 வது கல்லூரி தினம் இன்றாகும்.

2011 ஆண்டில் கீழ் பிரிவு தனியாக அமைக்க பட்டது. அப்போதை கல்லூரி அதிபர் இராமையா மற்றும் வலய பணிப்பாளர் ரெங்கராஜ் கல்லூரியின் அபிவிருத்தி சங்கம் செயலாளர். செ.தி.பெருமாள் உட்பட பலரின் முயற்சியால் இக் கல்லூரி ஆயிரம் பாடசாலைகள் ஒன்றாக தெரிவு செய்யப்பட்ட நிலையில் கீழ் பிரிவு வேறாக மேல் பிரிவு வேறாக இயங்க ஆரம்பித்தது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு நன்மதிப்புகளைப் பெற்று, பல்வேறு உயர் பதவிகளை ஆற்றிக் கொண்டிருக்கும் அனைவருக்கும், இனி வரப் போகும் சமூகத்திற்கும், இந்த ஸ்தாபனம் தொடர்ந்தும் தன் நேசகரத்தினை நீட்டி, தனது சேவையை விஸ்தரிக்க வேண்டும் என்பதே மலையக மைந்தர்களின் நம்பிக்கையும் அபிலாஷைகளும் ஆகும்.

‘காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தில் மாணப் பெரிது’

இப்பாடசாலை தொடர்ந்தும் தனது சேவையை தொடர்ச்சியாக செய்ய வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

பாடசாலை என்பது வெறும் கட்டடங்கள் அல்ல. அதுவோர் உணர்வுமிக்க, உயிரோட்டமுள்ள நிறுவனமாகும். இதில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், சமூகம், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரது பங்களிப்புக்கள் அவசியமாகும்.

இவையனைத்தையும் இணைத்துக் கொண்டு இன்று நம் பாடசாலை வீறுநடைப் போடுகின்றது என்பதனை அறியக் கூடியதாக உள்ளது. இது பாராட்டப்படக் கூடிய ஓர் அம்சமாகும்.

இன்று தேசிய கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் தேசிய கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், அபிவிருத்தி சங்கம் இணைந்து 82 அகவையை கொண்டாடினர். நிகழ்வில் தேசிய கல்லூரியின் அதிபர் எஸ்.பி.பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்கள் பழைய மாணவர்கள் கல்லூரி அபிவிருத்தி சங்கம் இணைந்து கேக் வெட்டிக் கொண்டாடினர்.



## பொறுப்புமிக்க பிரஜைகளாக

# மக்கள் மாறுவார்களா?



இருளப்பன் ஜெகநாதன்

jegannathan8@gmail.com

எமது நாடு பொருளாதார சிதைவால் நலிவுற்று வருகிறது. இதனால் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து வருகின்றனர். ஓரளவு சொத்து சேர்த்து வைத்துள்ளோர், மேற்தட்டு சமூகம் பிழைத்து கொள்ளும்.

அடித்தட்டு மக்களும் நடுத்தர மக்களின் நிலைமையோ சாவுக்கும் வாழ்வுக்கும் இடையே ஊசலாடுகிறது. இதற்கு யார் பொறுப்பு கூற வேண்டும் என்ற வினா ஒன்றை எழுப்புவதாயின் இதுவரை எம்மை ஆண்டு வந்த அனைத்து அரசாங்கங்களும் பொறுப்பு கூறல் வேண்டும் என்ற வெளிப்படையான பதிலை பலரும் கூறுவார்.

எனினும் பலர் கண்டுகொள்ளாத ஆனால் மறுக்க முடியா ஓர் உண்மையுண்டு. அதுதான் எம்மக்களின் மனோபாவமும் பொறுப்புணர்ச்சியும். எம்மை ஆண்டவர்கள் எம்மால் தெரிவு செய்யப்பட்டவர் என்பதையும் நாம் மறந்து விட்டோம்.

**“ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதால் எதுவும் மாறப் போவதில்லை. மக்களின் சிந்தனை மாறவேண்டும். மக்கள் பொறுப்பு மிக்க பிரஜைகள் கொண்ட சமூகம் ஒன்று எழுச்சி பெறுவதிலேயே இலங்கை தேசத்தின் மறுமலர்ச்சி தங்கியுள்ளது**

குடி எப்படியோ கோன் அப்படி!

நகரசபை முதல் மாகாண சபை வரை பணியாற்றும் ஊழியர்கள் தாங்கள் பெற்றுக்கொள்கின்ற சம்பளத்துக்கு ஏற்ற வகையில் வேலை செய்வதில்லை. கையெழுத்து வைத்து விட்டு வெளியே வேறு வேலைக்கு செல்லும் பணியாளர்கள், வேலையை விதிமுறைக்கு புறம்பாக விரைவில் செய்து கொள்ள லஞ்சம் கொடுக்க துணியும் பொதுமக்கள், விலைவாசி ஏற்றத்தை கண்டு கொள்ளாமல் அதற்கேற்ற வகையில் வாழ்க்கையை வடிவமைத்து கொண்டும் சகித்துக்கொண்டும் இதுவரை வாழ்ந்து கொண்டிருக்கும் சாமானியர்கள், தனது சுயநலத்துக்காக மக்கள் வாக்குகளை பெற்றுக்கொடுக்க அயராது பாடுபடும் அரசியல் கூலிகள் என பல பாத்திரங்களில் செயல்படுகின்ற பொதுமக்கமக்களும் இதற்குரிய பிரதான காரணகர்த்தாக்கள் ஒவ்வொரு குடிமகனும் ஏற்கத்தான் வேண்டும். எனினும் வெறுமனே ஆட்சியாளர்களை மட்டுமே சபிப்பதுதான் வேடிக்கை.

**“எம்மக்களை சட்டம் போட்டு தான் பொறுப்பு மிக்க பிரஜையாக மாற்ற வேண்டியுள்ளதா? என்ற கேள்வி ஒவ்வோர் இலங்கை பிரஜையும் தன்னைத் தானே கேட்டுக்கொள்ள வேண்டும்**

### எம்மை நோக்கிய எமது கேள்வி

ஊழல் அரசியல் வாதிகள் என அரசியல் வாதிகளை குற்றம் சாட்டும் எம்மில் எத்தனை பேர் இதுவரை சட்டப்படி அனைத்தையும் செய்துள்ளோம் என்ற வினாவை, எம்மை நோக்கி நாமே கேட்க வேண்டிய காலம் இது.

இலங்கையில் வீதியில் குப்பை போடும் பிரஜை, வெளிநாட்டில் தான் சாப்பிட சொக்கலேட்டின் கடதாசியை, தன் கால்ச்சட்டை பையில் வைத்துக்கொண்டு குப்பை தொட்டியை கண்டவுடன் அதனுள் போடுகிறான்.

அந்நிய நாட்டில் இருக்கும் போது வருகின்ற இந்த பொறுப்புணர்ச்சி, தன் தாய் நாட்டில் இருக்கும் போது வருவதில்லை ஏன்? அதற்கு காரணம் அந்நிய நாடுகளில் நடைமுறையில் உள்ள சட்டம் என, ஒரு வாதத்தை முன்வைத்தாலும்.

எம்மக்களை சட்டம் போட்டு தான் பொறுப்பு மிக்க பிரஜையாக மாற்ற வேண்டியுள்ளதா? என்ற கேள்வி ஒவ்வோர் இலங்கை பிரஜையும் தன்னைத் தானே கேட்டுக்கொள்ள வேண்டும்.

அரசாங்க வேலை என்றாலே மிகக்குறைந்த அளவில் வேலை செய்தால் போதும் நிச்சயமான கட்டாய வேலை என்பதெல்லாம் இல்லை. ஆனால் கட்டாயம் சம்பளம் மட்டும் உண்டு. ஒய்வூதியம் உண்டு. கடைசி வரை வாழ்க்கையை சிக்கல் இல்லாமல் ஓட்டலாம் என்ற நினைப்பு தானே இன்றும் பலரை அரசாங்க வேலைக்காக விண்ணப்பிக்க தூண்டுகின்ற காரணங்களாக இருக்கிறன.

தற்போது ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதால் எதுவும் மாறப்போவதில்லை. இனியாவது மக்கள் சிந்தனை மாறவேண்டும். அதன் மூலம் மக்கள் பொறுப்பு மிக்க பிரஜைகள் கொண்ட சமூகம் ஒன்று எழுச்சி பெறுவதிலேயே இலங்கை தேசத்தின் மறுமலர்ச்சி தங்கியுள்ளது. அது தவிர நாம் எடுக்கும் எல்லா நடவடிக்கைகளும் வியாதியின் வேர்களுக்கு சிகிச்சை அளிப்பதை விட்டுவிட்டு காய்ச்சலுக்கு மாத்திரம் எடுப்பது போன்றதாகும்.

பதினோராவது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு:

# ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன

பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள சார்ஜாவில் நடைபெறவுள்ளது. 'இணைய காலகட்டத்தில் தமிழ் மொழி எதிர்கொள்ளும் சவால்கள்' என்ற தொனிப்பொருளில் இடம்பெறவுள்ள இவ்வாய்வு மாநாடு, 2023 ஜூலை மாதமளவில் நடத்தப்படவுள்ளது.

இதனை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து லிங்கன் தொழில் மற்றும் மேலாண்மை பல்கலைக்கழகம் ஒழுங்குசெய்கின்றது.

11 ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக 136 நாடுகளிலிருந்து 63 சிறப்பு விருந்தினர்கள் அழைக்கப்படவுள்ளனர். இதேவேளை இம்மாநாட்டுக்காக சர்வதேச ரீதியில் ஆய்வுக்கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன. கலைப்புலம், சுவடிப்புலம், வளர்தமிழ்ப்புலம், மொழிப்புலம், அறிவியற்புலம் ஆகிய கருத்துத் தளங்களில் இவ்வாய்வுக் கட்டுரைகள் அமைய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மாநாட்டுக்கான ஆய்வுக்கட்டுரைகள் அனுப்புவதற்கான இறுதித்திகதி 30.11. 2022 ஆகும். பெயர், வயது, கல்வித் தகுதி, பணிபுரியும் நிறுவனம், மின்னஞ்சல் முகவரி ஆகிய விவரங்களையும் ஆய்வுக்கட்டுரையுடன் இணைத்து அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது. abstract2023@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஆய்வுக்கட்டுரைச் சுருக்கங்களை அனுப்பலாம் என்பது குறிப்பிடத்தக்கது.



# இந்து–பௌத்த நிவாரணத் திட்டம்











இந்து-பௌத்த நிவாரண திட்டத்தின் கீழ், ஹாங் ஹாங் லிமிடெட் புத்ததர்ம மையம் பேராசிரியர் தம்மஜோதி தேரர் ஊடாக இலங்கை மக்களுக்கு வழங்கிய நிதிஉதவி மூலம் இலங்கைக்கான இந்து-பௌத்த அமைப்பு மக்களுக்கு கட்டம் கட்டமாக உலர் உணவுப் பொதிகளை வழங்கி வருகிறது.

இதன் ஒரு கட்டமாக பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் வரவேற்பு மண்டபத்தில் சனிக்கிழமை (02) நடைபெற்ற நிகழ்வில் க. ஞானசேகரம், திருமதி சிவாநந்தனி துரைசாமி தலைமையிலான இலங்கை இந்துப் பேரவை, கிருலப்பன இந்துக் கல்லூரி மாணவர்களின் 200 குடும்பங்களை தெரிவு செய்தது.

நிகழ்வில் பௌத்த அமைப்பின் தலைவர் பேராசிரியர் தம்மஜோதி தேரர், அதிபர் இராஜ மாலினி சின்னையா, ஆசிரியர் சுமாதரன், இராஜேந்திரன் செட்டியார் மாணவ குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைப்பதை காணலாம்.

(படப்பிடிப்பு: எஸ். விஷான்)



# கதிர்காமம் பாதயாத்திரை

## பாதயாத்திரிகர் மத்தியில் சுவாமி தக்ஷயானந்த உரை



வி.ரி. சகாதேவராஜா

வரலாற்றில் முதல் தடவையாக யாழ்ப்பாணம் - கதிர்காமம் பாதயாத்திரை குழுவினருக்கு, கல்லடி இராமகிருஷ்ண மிஷன் குருகுலத்தில் செவ்வாய்க்கிழமை (05) பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த மாதம் நான்காம் திகதி யாழ். செல்வச் சன்னதி ஆலயத்திலிருந்து சிங்கராஜா ஜெயராஜா தலைமையில், ஆரம்பமான பாதயாத்திரை செவ்வாய்க்கிழமை காலை, மட்டக்களப்பு, அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் மட்டக்களப்பு, காரைதீவு ஒன்றியத்தின் காலை போசனத்துடன் புறப்பட்டு, கல்லடி இராமகிருஷ்ண மிஷன் குருகுலத்தை வந்தடைந்தார்கள்.

இராமகிருஷ்ண மிஷனின் மட்டக்களப்பு மாநில பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ், உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்த ஜி மகராஜ் ஆகியோர் விடுத்த அழைப்பை ஏற்று, அங்கு அவர்கள் விஜயம் செய்தார்கள். மிசனுக்கான இவ் விஜயம் வரலாற்றில் முதல் தடவையாக இடம் பெறுவதால் முக்கியத்துவம் பெறுகிறது.

யாழ். கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் பகல், கல்லடி இ.கி. மிஷனில் வரவேற்கப்பட்டு, அங்கு மதியபோசன விருந்து உபசாரம் பாயாசம், மோருடன் வழங்கப்பட்டது.

இதன்போது, கதிர்காமத்தில் உள்ள இராமகிருஷ்ண மடம் பற்றி, கல்லடி இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ் கூறினார்.

"1943 ஆம் ஆண்டு கதிர்காமத்தில் உள்ள புனித ஆலயத்திற்கு ஆயிரக்கணக்கான யாத்திரிகர்களுக்கு சேவை செய்யத் தொடங்கியது. விசாலமான கட்டடங்கள் கட்டப்பட்டு ராமகிருஷ்ணா மிஷன் மடம் 1953 ஆம் ஆண்டு ஜூலை 2 ஆம் தேதி அப்போதைய இலங்கைப் பிரதமராக இருந்த டட்லி சேனாநாயக்கவால் முறையாகத் திறந்து வைக்கப்பட்டது.

"அப்போதிருந்து, மத வேறுபாடின்றி யாத்ரீகர்களுக்கு இலவச உணவு, தங்குமிடம் வழங்கப்பட்டது. ஜூலை-ஒகஸ்ட் மாதங்களில் நடக்கும் வருடாந்த திருவிழாவின் போது, 17 நாள்களுக்கு தொடர்ச்சியாக, ஒரு நாளைக்கு பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட (10,000) யாத்திரிகர்களுக்கு இலவச உணவை மிஷன் வழங்கியது. மத விரிவுரைகள், சொற்பொழிவுகள், பஜனைகள் மடத்தில் வழக்கமான நடவடிக்கைகள்.



"1976 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதி அரசாங்கத்தால் கையகப்படுத்தப்படும் வரை, மிஷன் ஒரு குடியுரிமை சுவாமியின் மேற்பார்வையின் கீழ் அதன் உன்னத சேவைகளைத் தொடர்ந்தது" என்றார்.

முன்னதாக இராமகிருஷ்ண ஆலயத்தில் பஜனையும் விசேட பூஜையும் இடம்பெற்றன. இல்ல மாணவர்கள், பாதயாத்திரிகர்கள் இணைந்து சுவாமி நீலமாதவானந்தா தலைமையில் ஒரு மணி நேரம் பஜனை செய்தனர்.

அவ்வமயம் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், முன்னாள் பட்டிப்பளை மேற்கு பிரதேச சபை தவிசாளர் சிவஞானம் அகிலேஸ்வரன், உதவி கல்விப்பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

பாதயாத்திரிகர்கள் இ.கி.மி விபுலானந்த மணிமண்டபத்தில் தக்கவைக்கப்பட்டனர். பிற்பகலில் அங்கு அனைவருக்கும் மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது. வைத்திய நிபுணர் டொக்டர் சுந்தரேசன் தலைமையிலான குழுவினர் இம் மருத்துவ முகாமை நடத்தினர்.

முடிவில் பாதயாத்திரை குழுத்தலைவர் சி.ஜெயராசா தெரிவிக்கையில், "வரலாற்றில் முதல் தடவையாக மிஷனுக்கு செல்வது மிகுந்த சந்தோஷத்தை அளிக்கின்றது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எங்களில் 99 வீதமானவருக்கு மிஷன் பற்றி தெரியாது. இங்கு வந்த பின்பே சுவாமிகளது அன்பான வரவேற்பையும்







உபசரிப்பையும் உணரமுடிந்தது. குருகுல மாணவர்கள் நேரத்துக்கு ஒழுங்குடன் நடப்பதை அவதானிக்க முடிந்தது. அதுமட்டுமின்றி மருத்துவ முகாமையும் நடாத்தினர். ஆகவே, எங்களை அன்புடன் அழைத்த சுவாமிகளுக்கு நன்றி கூறுகின்றோம். இன்னும் 2 தினங்களில் நாங்கள் அம்பாறை மாவட்டத்தை அடைவோம். 22 ஆம் திகதி உகந்தைமலை முருகன் அருகில் உள்ள காட்டுப்பாதை திறக்கப்பட்டதும் அதன் ஊடாக காட்டுக்குள் பிரவேசிக்க இருக்கின்றோம். முருகன் அருளால் எதிர்வரும் 28 ஆம் திகதி கதிர்காமத்தை சென்றடைய இருக்கின்றோம்" என்றார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 09 ஜூலை 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.